விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 சித்திரை: 28 ஷவ்வால் பிறை: 15 இதழ்: 88
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 11-05-1990

### சத்திர சிகிச்சை வார்ட்டுக்கு
## 4 லட்சம் ரூபா ஒதுக்கீடு

[யாழ்ப்பாணம்]

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சத்திர சிகிச்சை வார்ட்டை முற்றுகக் கட்டி முடிக்க 4 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

''கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரியின் அலுவலகத்துக்கு நிரந்தரமான கட்டிடம் அமைக்கப்படவுள்ளது. இதற்காக 10 லட்சம் ரூபா நிதியை வடக்கு கிழக்கு மாகாணசபை சுகாதார செயலாளர் ஒதுக்கியுள்ளார்'' என்று யாழ். மாவட்ட சுகாதாரப்பணிப்பாளர் 'ஈழநாடு'க்குத் தெரிவித்தார்.

''கோப்பாயில் தாதிகள் விடுதிகள் அமைக்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. சங்கானை ஆஸ்பத்திரியில் வைத்திய அதிகாரி வதிவிடம் அமைக்க எட்டு லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. வட்டுக்கோட்டை கிராமிய ஆஸ்பத்திரியில் பதிவுபெற்ற வைத்திய அலுவலரின் வதிவிட விடுதி அமைக்க 4 லட்சம் ரூபா நிதி ஒதுககப்பட்டுள்ளது.

யாழ்.. கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள ஆஸ்பத்திரிகள் மருந்தகங்கள் ஆகியவற்றின் கட்டிடம்திருத்த மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக ஏழு

(8-ம் பக்கம் பார்க்க)

## ★இந்தியபடையின்'நடவடிக்கை'அம்பலமாகிறது
# கிளிநொச்சி வாசிகளின் 237 காணி உறுதிகள்
# செயலகத்தில் எரிக்கப்பட்டன!

(நமது நிருபர்)

**யாழ். செயலகத்தில் வைத்து, கிளிநொச்சி மாவட்டக் காணிகளின் உறுதிகள் இந்தியப் படையினரால் முற்றுக எரிக்கப்பட்டதாக கிளிநொச்சி செயலக வட்டாரங்கள் 'ஈழநாடு'வுக்கு அச்சம் தெரிவித்துள்ளன.**

சுவர்ணபூமி திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தின் காணி சொந்தக்காரர்களுக்கு வழங்குவதற்கென வைக்கப்பட்டிருந்த காணி உறுதிகளில் 237 எரிந்து முற்றுக சேதமடைந்தும் விட்டதாகவும், இந்தியப்படையினரின் காலகட்டத்திலே இது நடந்ததாகவும் திடுக்கிடும் தகவல்களை கிளிநொச்சி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதன் விளைவாககிளிநொச்சி

(8-ம் பக்கம் பார்க்க)

## வீடமைப்பு திட்டத்துக்கு ஐ. நா. பாராட்டு

[கொழும்பு]

ஜனதிபதி திரு. ஆர். பிரேமதாசாவினுல் ஆரம்பிக்கப்பட்ட இலங்கையின் வீடமைப்பு அபிவிருத்தித் திட்டம் அடைந்துள்ள முன்னேற்றம் தன்னை வெகுவாக கவர்ந்துள்ளது என்று ஐக்கிய நாடுகள் மனிதக் குடியிருப்பு ஆணைக் குழுவின் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் ஹசுன் ஜெகான் தெரிவித்துள்ளார்.

1987 ம் ஆண்டு ஜனதிபதி

(8-ம் பக்கம் பார்க்க)

## புதுடில்லியில் ராஜீவ் காந்தி நேற்று உண்ணுவிரதம்

(புதுடில்லி)

இந்தியாவின் ஒற்றுமைக்கு ஏற்பட்டிருக்கும் அச்சுறுத்தலையும் அதிகரித்துவரும் வகுப்புவாதப்போக்கையும் கண்டித்து மக்களின் கவனத்திற்குக் கொண்டுவரும் பொருட்டு இந்திராகாங்கிரஸ் கட்சித்தலைவர் திரு. ராஜீவ்காந்தி நேற்று முழுநாள் உண்ணுவிரதம்மேற்கொண்டார்.

புதுடில்லியில் நடைபெற்ற இந்த உண்ணுவிரதத்தில் இந்திரா காங்கிரஸ் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் பலர்

(8-ம் பக்கம் பார்க்க)

### சாம். தம்பிமுத்து கொலை
## கொலையாளிகளைத் தேட விசேட பொலிஸ் பிரிவு!

(கொழும்பு)

படுகொலை செய்யப்பட்ட மட்டக்களப்பு எம். பி. திரு. சாம் தம்பிமுத்துவை கொலை செய்தவர்களைக் கண்டுபிடிப்பதற்காக விசேட பொலிஸ் காவல் படையினர் உருவாக்கபபட்டுள்ளார்கள்.

கொழும்பிலுள்ள பல தங்கு விடுதிகள், ஹோட்டல்களில் தேடுதல் நடவடிக்கையில் இந்தப்படையினர் இறங்கியுள்ளனர்.

(8-ம் பக்கம் பார்க்க)

### புயலால் பாதிக்கப்பட்ட
## ஆந்திராவிற்கு தமிழகம் 25 லட்சம் ரூபா உதவி

[சென்னை]

புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு அல்லல்படும் ஆந்திரா மாநிலத்து மக்களின் துயர்துடைக்க தமிழக முதலமைச்சர் நிதியிலிருந்து 25 லட்சம் ரூபா நிவாரண நிதியாக வழங்கப்படும் என்று தமிழக முதலமைச்சர் திரு. மு. கருணநிதி நேற்று சட்டப்பேரவையில் தெரிவித்தார்.

தமிழகத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் 6 பேர் கொல்லப்பட்டுள்ளதாகவும் இவர்களது குடும்பத்தினருக்கு தலா 2000 ரூபா நிவாரணநிதி உதவியாகவழங்க தான் உடன்

(8-ம் பக்கம் பார்க்க)

## பிறப்பு இறப்பு காணிப் பதிவாளர் அலுவலக வேலைகள் ஒருமுகப்படுத்தப்படும்

[கொழும்பு]

பிறப்பு, இறப்பு, விவாக காணிப்பதிவாளர் அலுவலகங்களின் வேலைகள் ஒருமுகப் படுத்தப்பட பொது நிர்வாக மாகாணசபைகள் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

சிலஅலுவலகங்களின் வேலைகள் சம்பந்தமாக அமைச்சுக்குப் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இத்தகைய முறைப்பாடுகள் குறித்து மூன்று நாட்களுக்குள் அறிக்கையினைச்சமர்ப்பிக்குமாறு அமைச்சர் பெஸ்டர் பெரேரா பதிவாளர் நாயகத்தைப் பணித்துள்ளார்.

எந்தவித தாமதமுமின்றி பிறப்பு இறப்புச் சான்றிதழ்கள் வழங்கப்படவேண்டும் என்று அந்தந்தப்பகுதி தலைவர்களுக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது. (து)

## கிளிநொச்சி மாவட்டத்தில் 'மினி'க் கச்சேரிகள்!
### அரச அதிபர் நடவடிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் 'மினி'க்கச்சேரிகளை கிராமங்கள் தோறும் அமைக்க மாவட்ட அரசாங்க அதிபர் திரு. மாணிக்கவாசகர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இம்மாவட்டத்தின் முதலாவது 'மினி'க்கச்சேரியை எதிர்வரும் 24ம் திகதி வன்னேரிக் குளத்தில் ஆரம்பிக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அரசாங்க அதிபர் 'ஈழநாடு'க்குத் தெரிவித்தார்.

மினிக்கச்சேரிகளை கிராமங்கள் தோறும் நடத்திமக்களின் தேவைகளை உடனுக்குடன் நிவர்த்தி செய்ய தாம் திட்டமிட்டுள்ளதாகவும் இம்மினிக்கச்சேரியில் சகல திணைக்களத் தலைவர்களும் பிரசன்னமாகி மக்களின் குறைபாடுகள், தேவைகளை நிறைவுசெய்வார்களென்றும் சுவர்ணபூமி திட்டத்தின் மூலம் கிராம மக்களுக்கு காணி உறுதிப்பத்திரங்கள் 'மினி'க் கச்சேரிகளில் வைத்து வழங்கப்படும்'' என்றும்அரசஅதிபர் திரு. மாணிக்கவாசகர் தெரிவித்தார். (83)

## கிளிநொச்சியில் பாரிய குழாய் நீர்த்திட்டம்
### குடிநீர்த்தட்டுப்பாடு நீங்கியது

[கிளிநொச்சி]

கிளிநொச்சி நகரில் பாரிய குழாய் நீர்த் திட்டம் அமுல் படுத்தப்பட்டுள்ளதைத் தொடர்ந்து நகரில் நிலவிய குடிதண்ணீர்த் தட்டுப்பாடு நீங்கியுள்ளது.

இரணைமடுக் குளத்திலிருந்து கிளிநொச்சி நகருக்கு நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினர் இத் தண்ணீர்த் திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளனர்.

இதற்கென பல லட்சரூபா செலவில் பிரமாண்டமான

(8-ம் பக்கம் பார்க்க)

### பனை அபிவிருத்திச் சபையின் பதில் தலைவராக
## செல்லத்துரை நியமனம்
### ஆராய்ச்சியாளர் குழுவுடன் 'நடா' வெளிநாடு விஜயம்

(யாழ்ப்பாணம்)

பனைஅபிவிருத்தி சபையின் பதில் தலைவராக மட்டக்களப்பைச் சேர்ந்த இச்சபையின் உறுப்பினர் திரு. பூ. செல்லத்துரை பெருந்தோட்டக்கைத் தொழில் அமைச்சினுல் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்திட்டநிறுவனம் பனை அபிவிருத்திச்சபையுடன் இணைந்து நடத்தும் அபிவிருத்திஆராய்ச்சித்திட்டத்தின் கீழ்வெளிநாடு செல்லும் ஆராய்ச்சியாளர்கள் குழுவுடன் சபைத்தலைவர் திரு. க. நடராசாவும் வெளிநாடுசெல்ல அமைச்சு அனுமதி வழங்கியதையடுத்து சபைத்தலைவர் நாடுதிரும்பும்

(8-ம் பக்கம் பார்க்க)

## லொறி விபத்தில் சிறுவன் பலி

(பண்டத்தரிப்பு)

வேகமாக வந்தலொறி மோதியதால் சைக்கிளில் சென்ற 13 வயது சிறுவன் ஸ்தலத்தில் பலியானர்.

(8ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

நடராசா அரியமலர். சங்கானை கிழக்கு, பண்டத்தரிப்பு என்பவருடைய அடையாள அட்டை யாழ். நகரில் இருந்து பண்டத்தரிப்புக்கு போகும் வழியில் மினிபஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுப்பவர்கள் ஈழநாடு காரியாலயத்திலோ அல்லது உரியவரிடமோ சமர்ப்பிக்குமிடத்து தகுந்த சன்மானம் வழங்கப்படும். நன்றி! (சி-3683)

### விற்பனைக்கு

பூரண வளைத்திறனுடைய பம்பாய் வெங்காய விதை நாசிக் சிகப்பு ரகம். வியாபாரிகளுக்கு விசேட சலுகை வழங்கப்படும். கிலோ 375-00 படி கிடைக்கும். பிள்ளையார், 259, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். (சி-3797)

உற்சவ தேவைக்குரிய விநாயகர், துர்க்கை அம்மன், முருகன் விக்கிரகங்கள் கோவில் பட்டுக்குடை, மணிகள், கொடிக் கம்பங்கள் விற்பனைக்குண்டு. பிள்ளையார், 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-3681)

### நூல்கள்

பிரபல எழுத்தாளர்களினது அனைத்துப் புதிய நூல்களும், மற்றும் றேடியோ மெக்கானிசம், வைத்தியம், தையல் கலை, சோதிடம், சமயம், சமையல், மற்றும் பல ஆராய்ச்சி நூல்கள் அனைத்தும் புதிதாக இறக்குமதியாகி விற்பனையாகிக் கொண்டு இருக்கின்றன. உங்களது அரிய நூல்களை தெரிவுசெய்து கொள்ளுங்கள். பூபாலசிங்கம் புத்தகசாலை, 15/2, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-728)

### பூசகர் தேவை

ஸ்ரீ நாகபூஷணியம்மை தேவஸ்தானத்தின் இருகாலப் பூசைக்கு பிராமணக் குடும்பஸ்தர் உடன் தேவை. வீட்டு வசதி உண்டு. தொடர்பு:- தருமகர்த்தா, அராலி மேற்கு, வட்டுக்கோட்டை. (சி-3826)

### தேவை

றெக்கோடிங் தெரிந்தவர்கள், மற்றும் பழகுவதற்கு ஆர்வமுள்ள பெண்பிள்ளைகள் தேவை. தொடர்புகொள்ளவும். ஆனந்தா றெக்கோடிங் பார், கே. கே. எஸ். றோட், உடுவில், சுன்னாகம். (சி 3837)

### சேவை

பழைய புத்தகங்கள் வாங்கப்படும், விற்கப்படும். கதைப் புத்தகங்கள் O/L புத்தகங்கள் அநேகம் உண்டு, Second Hand Book House, 13/6, ஸ்ரான்லி றோட் (இலங்கை வங்கிக்கு முன் பட்டப்படிப்பு கல்லூரி லேன்), யாழ்ப்பாணம். (சி.3680)

## மதியபோசனம் வழங்கப்படுவதில்லை

(பருத்தித்துறை)

வடமராட்சிப் பகுதியில் உள்ள பாடசாலைகளில் மாணவர்க்கு மதிய போசனம் வழங்கப்படுவதில்லை என மாணவர்களும், பெற்றோர்களும் கவலை தெரிவித்துள்ளனர்.

இது சம்பந்தமாக யாழ். கல்விப்பணிப்பாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (52)

## மருதனுமடம் முறைச்சந்தை கூடாததால் பொதுமக்கள், விவசாயிகள் பாதிப்பு

(உடுவில்)

அண்மைக்கால அசம்பாவிதங்களை அடுத்து மருதனுமடம் சந்தைக்கு வருவோர் எண்ணிக்கை மிகவும் குறைந்து காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

பன்னெடுங்காலமாகச் செவ்வாய், வியாழன், சனி, ஞாயிறு நாட்களில் மருதனுமடம் சந்தை கூடி, வியாபார நடவடிக்கைகள் சிறப்பாக நடைபெற்றுவந்தன. இதே நேரத்தில் திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் சுன்னாகம் சந்தை கூடி வியாபாரம் நடைபெற்றுவந்தது.

அண்மைக்கால அனர்த்தங்கள் காரணமாகவும், இந்திய அமைதிப் படையினர் முகாமிட்டிருந்ததைத் தொடர்ந்தும் மருதனுமடம் சந்தை கூடாமல் விடப்பட்டிருந்தது. சிறிது சிறிதாகச் சுன்னாகம் சந்தை கூடத் தொடங்கியதை அடுத்து மக்கள் அங்கு சென்று கொள்வனவு-விற்பனவுசெய்து வந்தனர்.

சுன்னாகமும், மருதனுமடமும் முறைச் சந்தைகளாக விளங்கிவந்து தற்போது தினமும் சுன்னாகம் சந்தை மட்டும் கூடுவதால் பெரும்பாலான மக்கள் அங்கு சென்றுவருகின்றனர்.

தென்பகுதியில் இருந்து வரும் மரக்கறி லொறிகள், தேங்காய் லொறிகள் எதுவும் தற்போது மருதனுமடத்துக்கு வருவதில்லை. இதனால் இப்பகுதி மக்கள் மிகவும் கஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

இணுவில், தாவடி, கோண்டாவில், சுதுமலை போன்ற இடங்களில் உள்ள விவசாயிகள் தமது விளைபொருள்களைச் சுன்னாகத்திற்கு அதிக கஷ்டப்பட்டுக் கொண்டு செல்வதை அவதானிக்க முடிகின்றது.

சுன்னாகம், மருதனுமடம் சந்தைகள் தற்போது வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் கட்டுப்பாட்டில் இயங்கி வந்தாலும்கூட, மக்களின் நலன் கருதி முன்போல் முறைச் சந்தைகளாக மீண்டும் கூடி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும் எனப் பொதுமக்கள், விவசாயிகள் பலரும் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர். (109)

## முல்லைத்தீவு மாவட்டத்தில் 7000 ஏக்கர் நிலத்தில் நெல் உற்பத்தி செய்யப்படும்

(பருத்தித்துறை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் 1990-ம் ஆண்டுக்குரிய சிறுபோக வேளாண்மைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் இவ்வாண்டு 7,000 ஏக்கர் நிலத்தில் நெல் உற்பத்தியும் 700 ஏக்கர் நிலத்தில் உபஉணவுப் பொருட்கள் உற்பத்தியும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்ட பெரும்போக, சிறுபோகத்திற்கான 90ம், 91ம் ஆண்டுக்குரிய விவசாய செயற்பாடு திட்டத்தை தயாரிப்பதில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திரு. கே. பொன்னம்பலம் ஈடுபட்டுள்ளார்.

கடந்த காலபோக வேளாண்மை இம்மாவட்டத்தில் பெருவெற்றியை அளித்துள்ளதுடன் ஏக்கருக்கு சராசரி 65 புசல் நெல் அறுவடை செய்யப்பட்டுள்ளது. மாவட்டத்திலுள்ள பெரிய நீர்ப்பாசனக் குளங்களிலும் சிறிய நீர்ப்பாசனக்குளங்களிலும் போதியளவு தண்ணீர் இருப்பதால் இவ்வருடமும் இம் மாவட்ட விவசாய அபிவிருத்தி வெற்றியளிக்கக் கூடியதாக இருக்கின்றது.

இவ்வாண்டு விவசாய உற்பத்தியை மேலும் பெருக்கு முகமாக நீண்டகாலமாகச் செய்கை பண்ணப்படாத காணிகளையும் பயிர்ச் செய்கைக்கு உட்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது காணி அற்றவர்களுக்கு சுவீகரிக்கப்பட்ட காணிகளை பகிர்ந்தளிப்பதற்கு அரசாங்க அதிபர் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார். இந் நடவடிக்கைகளுக்கு முல்லைத்தீவு கமநலசேவை உதவி ஆணையாளர் திரு. எஸ். பஞ்சலிங்கமும், அரசாங்க அதிபருக்குப் பூரண ஒத்துழைப்பை வழங்கிக்கொண்டிருக்கிறார்.

1990 சிறுபோக வேளாண்மையின்போது நாற்று நடுகையில் ஈடுபடுபவர்களுக்குச் சான்றிதழ் வழங்குவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. இதனால் இப்பகுதியின் விவசாய அபிவிருத்தியை மேம்படுத்த முடிவதுடன் சிறு போக வேளாண்மையின் அறுவடையின்போதுகூடியவிளைச்சலைத்தரும்வயல் சொந்தக்காரருக்குப் பரிசாகப்பணமும் வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. (52)

## ஞாபகார்த்தக் கூட்டம்

(கொக்குவில்)

கொக்குவில் இந்துக்கல்லூரியின் எண்பதாவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு ஞாபகார்த்தமாக சுமார் பதினைந்து லட்சம் ரூபா செலவில்இரண்டு மாடிக்கட்டிடம்அமைக்கப்படவுள்ளது.

பெற்றோர், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் உதவியினால் இக்கட்டிடம் அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. திரு. சு.குமாரவேலு இக்கட்டிடத்திற்கான அத்திவாரக்கல்லை நாட்டினார். கட்டடவேலைகள் தற்பொழுது துரிதமாக நடைபெற்றுவருகின்றது.

இக்கட்டிடம் பூர்த்தியானதும் மாணவர்களின் இடநெருக்கடி நீங்கும் என நம்பப்படுகின்றது.


வட இலங்கை
சிகை அலங்கரிப்பாளர் சங்கம்
**பொதுக் கூட்டம்**

இடம்: யாழ். மனோகரா திரை அரங்கு
காலம்: 16-05-1990 புதன்கிழமை
நேரம்: காலை 8-00 மணி

சிகை அலங்கரிப்புத் தொழில் செய்யும் அனைவரும் மற்றும் கிளைச் சங்கங்களும் இவ்வழைப்பை ஏற்றுக் கொள்ளவும். (தனிப்பட்ட அழைப்பு இல்லாமைக்கு வருந்துகின்றோம்)

கூட்டம் முடியும்வரை கடைகளைப் பூட்டி கூட்டத்தில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

(பி. கு; தவறின் ஒழுங்கமைப்பு கோவை 4-வதின் படி சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.)

சு. இராசேந்திரம் தலைவர் (சி-3679) செ. சிவராசா செயலாளர்



**கம்பியூட்டர் கல்வி**

★ Diploma in Data Processing and Computer Programming in BASIC Language

ஆரம்பம்: 12th May 1990

(சனி, ஞாயிறு வகுப்புக்கள்) நேரம்: 1.30 p.m.

**LOTUS 1-2-3**

ஆரம்பம்: 16th May 1990

(சனி, ஞாயிறு வகுப்புக்கள்)

O/L படித்த இரு பாலாரும் சேரலாம். மிகவும் விளக்கமான முறையில் பயிற்சி அளிக்கப்படும். பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.




UNIKCO COMPUTER CENTRE

No. 5, Power House Road, 2nd Lane, Jaffna.

(எ 736)



**ADMISSIONS FOR MADRAS INSTITUTE OF ENGINEERING TECHNOLOGY**

பின்வரும் பொறியியல் தொழில்நுட்பத் துறைகளில் கல்வி பயில விரும்பும் மாணவ மாணவிகள் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.

**வகுப்புகள்**
**யூன் 15ந் திகதி ஆரம்பமாகிறது**

1. C. E. I. லண்டன் (G. C. E. A/L சித்தி)
2. A. M. I. E. இந்தியா (G.C.E. O/L கணிதம்,) ஆங்கிலம் உட்பட சித்தி)
3. Dip. in Computer Science (G. C. E. O/L சித்தி)
4. Dip. in Airconditioning Refrigiration (G. C. E. O/L சித்தி)

★ பிரயாண ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.
★ தங்குமிட வசதிகள் சாப்பாட்டுடன் செய்து கொடுக்கப்படும்.

குறிப்பு: முன்பு தொடர்பு கொண்டவர்களும் திரும்பவும் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி :
பணிப்பாளர்,
மனிதாபிமான பொருளாதார புனருத்தாரண அபிவிருத்தி சேவை நிலையம் (HERDCS)
கேரதீவு றோட்,
(தச்சன்தோப்பு சந்திக்கு அருகாமையில்)
நாவற்குழி கிழக்கு, கைதடி.

(எ 738)

# கொலம்பியாவில் வைத்து அதிபர் புஷ், கொலம்பிய அதிபரை கொல்ல முயற்சி; பொலிஸார் முறியடிப்பு

## பல 'ஸ்ரிங்கர்' ஏவுகணைகள் மீட்பு

(பொகொடா)

**அமெரிக்க அதிபர் திரு. ஜோர்ஜ் புஸ்ஸையும், கொலம்பியா அதிபர் திரு. வெர்ஜீலியோ பார்கோவையும் கொலை செய்ய கொலம்பியா போதைவஸ்துக் கடத்தல்காரர்கள் அண்மையில் மேற்கொண்ட முயற்சிகளை பொலிஸார் முறியடித்தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் இவர்கள் தொடர்ந்தும் தமது இலக்கைக் குறிவைக்கக்கூடும் என்றும் அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இது தொடர்பான சதி நடவடிக்கையில் ஈடுபட்ட இரு கொலம்பியப் பிரஜைகளையும் பொலிசார் கைது செய்துள்ளனர். இவர்களிடமிருந்து பெற்ற தகவல்கள் மூலம் பல உண்மைகள் வெளிவந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் கொலம்பியாவில் போதைவஸ்துக் கடத்தல் முறியடிப்புத் தொடர்பாக நடைபெற்ற மாநாட்டில் அமெரிக்கா, கொலம்பியா, மற்றும் மத்திய அமெரிக்க நாட்டுத் தலைவர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

இவ்வமயம் அதிபர் புஸ்ஸையும், கொலம்பிய அதிபரையும் கொலை செய்யத் தரையிலிருந்து ஆகாயம் நோக்கிப் பாயும் பத்திற்குமேற்பட்ட பிரான்ஸ் தயாரிப்பு ஏவுகணைகள் பயன்படுத்தப்படவிருந்தன. மேலும் கிரனைட் லோஞ்சரும், நவீனரக ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

பெப்ரவரி 12-ம் திகதி இம் மாநாட்டில் கலந்து கொள்ள அதிபர் புஷ் கொலம்பியாத் தலைநகர் பொகொட விமான நிலையத்திற்கு வந்திறங்கும்போது அவரைக் கொலை செய்யவும், அதே சமயம் கொலம்பியா அதிபரை அவரது மாளிகையில் வைத்துக் கொலை செய்யவும் இந்த 'ஸ்ரிங்கர்' ஏவுகணைகள் பயன்படுத்தப்படவிருந்தன. பாதுகாப்பு பெருமளவு பலப்படுத்தப்பட்டிருந்ததால் இது சாத்தியமற்றுப்போய்விட்டது.

தற்போது இந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளதுடன் இதில் சம்பந்தப்பட்ட கொலம்பியா போதைவஸ்துக் கடத்தல் கும்பல்களின் முக்கிய புள்ளிகளைத் தேடிப் பொலிஸார் பெரும் வேட்டையில் இறங்கியுள்ளனர். (சி)

## தொம்பே பகுதியில் 'மினி' சூறுவளி

(கொழும்பு)

தொம்பே பகுதியைச் சேர்ந்த அனுரகொட என்னும் கிராமத்தில் 'மினி'ச் சூறுவளி தாக்கியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புயல் காற்றினால் அக்கிராமத்தில் இருந்த வீடுகள் சேதமடைந்தன.

நேற்று முன்தினம் பொலிஸார் அங்கு சென்று நிவாரணப் பணிகளை மேற்கொண்டனர்.

வீடுகளுக்கு மேலாகச் சாய்ந்து விழுந்த மரங்களைத் தறித்து அகற்றும் பணி, நேற்று முன்தினம் முழுவதும் மேற்கொள்ளப்பட்டது.

சுமார் பதினைந்து வீடுகள் முற்றாகச் சேதமடைந்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

## புயல் கடந்த பூமியில் 30 பேர் பலி! பலத்த சேதம்!

### அகதிகளாக மக்கள் வெளியேற்றம்!

(ஹைதராபாத்)

ஆந்திரா-பிரதேசத்தை சூறுவளி கடுமையாக தாக்கியதில் சுமார் 20பேர் உயிரிழந்தனர். பல வீடுகள் சேதமாகியுள்ளன. ஆயிரக்கணக்கானவர்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளனர்.

கடந்த சில தினங்களாக வங்காள விரிகுடாவில் மையம் கொண்டிருந்த காற்றழுத்த மண்டலம் தமிழகத்தையும் ஆந்திராவையும் கடுமையாக தாக்கலாமென எச்சரிக்கப்பட்டிருந்தது.

எனினும் தமிழகம் இதிலிருந்து தப்பிக்கொண்டது. ஆந்திரா மாநிலத்தை நேற்று முன்தினம் மாலை சூறுவளி மிகக்கடுமையாக தாக்கியது. இதுபற்றி ஏற்கனவே எச்சரிக்கப்பட்டு முன்னெச்சரிச்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதால் இழப்புகள் பெருமளவு குறைந்துள்ளதாக மாநில அரசு அறிவித்துள்ளது.

அகதிளாக்கப்பட்டமக்களுக்கான சகல உதவிகளும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், மீட்புப்பணிகள் துரிதப்படுத்தப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கரையோர பகுதிகள் பலவற்றிலும் கடல் நீர் புகுந்துள்ளதால்பலகிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. (சி)

## கல்விக் கருத்தரங்கு

(அச்சுவேலி)

கல்வியும் பரவலாக்கமும் தொடர்பான கருத்தரங்கை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கமும்-இப்ரூ-பெஸ் ஆகியன இணைந்து மூன்று தினங்களிற்கு தொடர்ச்சியாக நடாத்துகின்றன.

கருத்தரங்கு இன்றும் நாளையும் 13ம் திகதியும் முழுநாள் நிகழ்ச்சிகளாக மூன்று தினங்களுக்கு நடைபெறும் கருத்தரங்கில் பலமுக்கிய பிரமுகர்கள் உரையாற்றவுள்ளனர்.

## பெய்ரூட் தீப்பற்றி எரிகிறது! கடும் சண்டை தொடர்கிறது!

### 70 பேர் பலி

(பெய்ரூட்)

லெபனானில் மேற்கு பெய்ரூட்டில் கிறிஸ்தவ-முஸ்லிம் படைகளிடையே கடும்யுத்தம் இடம்பெற்று வருகிறது. ஷெல், பீரங்கி, ஏவுகணைதாக்குதல்களினால் பெய்ரூட்டின் பல பகுதிகள் தீப்பற்றி எரிவதாகவும் சுமார் 70 பேர் கொல்லப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நகர் எங்கும் தீச்சுவாலை கொளுந்து விட்டெரிவதால் இழப்புகள், சேத விபரங்கள் பற்றி மேலதிக விபரங்கள் எதுவும் கிடைக்கவில்லை. ஆயிரக்கணக்கான மக்கள் வீடு வாசல்களை விட்டு ஒடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடுமையாக நடைபெறும் இந்த யுத்தத்தில் முஸ்லிம் படையின்முக்கிய தளபதிகள் இருவர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் பல அதிகாரிகளும் இறந்திருக்கலாமெனவும் ஊகிக்கப்படுகிறது.

முஸ்லிம் படைகளிடம் இழந்த சில முக்கிய நகரங்களை மீண்டும் கைப்பற்றும் நோக்குடன் ஆயிரக்கணக்கான கிறிஸ்தவ படைகள் மிகத் தீவிரமாக யுத்தத்தில் ஈடுபட்டுள்ளன. இந்த யுத்தத்தில் தற்போதுஇருதரப்பிலுமாகசுமார் 8,000 பேர் வரை ஈடுபட்டு வருவதாகவும் கூறப்படுகிறது.

கடந்த மூன்று மாதங்களில் இந்த யுத்தத்தால் சுமார் 1,500 பேர் கொல்லப்பட்டதுடன் 4,000 பேர் வரை படுகாயமடைந்துள்ளனர். (சி)

## லண்டன் செல்லும் அணியில் சிறிகாந், மொஹிந்தர் இல்லை!

### பத்திரிகைகள் கண்டனம்

(புதுடில்லி)

இந்தியா-இங்கிலாந்து கிரிக்கெட் தொடருக்கான வீரர்களின் பெயர்கள் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்திய அணியின் முன்னாள் தலைவர் கிருஷ்ணமாசாரி சிறிகாந், மொஹிந்தர் அமர்நாத் இந்த அணியில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

யூன் மாதம் 30ம் திகதி இத்தொடர் இங்கிலாந்தில்ஆரம்பமாகிறது. இவ் அணியில் மீண்டும் வெங்ஸகாரும், ரவிசாஸ்திரியும்(உபதலைவர்) சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர் சிறிகாந்த், மொஹிந்தர்போன்ற அனுபவ ஆட்டக்காரர்கள் வெளியேற்றப்பட்டதை பல பிரபல பத்திரிகைகளும் கண்டித்துள்ளன.

அணி விபரம்: அஸாருதீன் (தலைவர்), ரவிசாஸ்திரி (உப தலைவர்), என். எஸ். சிது டபிள்யூ. வெங்கட்ராமன், சஞ்சய் மஞ்ரேகர், சச்சின் ரென்ருல்கர், வெங்சகார், கபில்தேவ், கிரான் மூர், மனோஜ் பிரபாகர், அதுல் வாசன், சஞ்சீவ் சர்மா, வெங்கடபதி ராஜி, கிர்வாணி, நயன் பொன்கியா, அனில் கம்பிள். (சி)

## "பாகிஸ்தான் முயற்சிகளை அமெரிக்கா எதிர்க்கிறது"

### - ஜி. கே. குஜ்ரால்

(புதுடில்லி)

காஷ்மீர்விவகாரத்தை சர்வதேச ரீதியில் பெரிதுபடுத்த அமெரிக்கா விரும்பவில்லை இது தொடர்பாகபாகிஸ்தான் மேற்கொள்ளும் சகல முயற்சிகளுக்கும் அமெரிக்கா எதிர்ப்பு தெரிவிக்குமென உறுதியளித்துள்ளதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. ஐ. கே. குஜ்ரால் தெரிவித்துள்ளார்.

அண்மையில் அமெரிக்கா சென்று திரும்பியுள்ள அமைச்சர் நேற்று முன்தினம் பத்திரிகையாளர்களுக்களித்தபேட்டி ஒன்றின்போதே இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் கூறுகையில்;

காஷ்மீர் விவகாரத்தை பெரிதுபடுத்தி அதன் மூலம் இந்தியாவிற்கு எதிராக சர்வதேச ரீதியில் நெருக்கடிகளை ஏற்படுத்த பாகிஸ்தான் முயற்சித்து வருகிறது. ஆனாலும் இதனை சமாதான முறையில் சிம்லா உடன்பாபட்டின்படி தீர்க்கவே அமெரிக்கா விரும்புகிறது.

இதுபற்றி அமெரிக்கா பாகிஸ்தானுக்கு பலதடவைகள் தெரிவித்துள்ளதாகவும் இந்தியாவின் முயற்சிகளை அமெரிக்கா ஆதரிப்பதாகவும் தமக்கு உறுதியளிக்கப்பட்டதாக தெரிவித்தார். (சி)

## தென்மராட்சிப் பிரிவில் நாளை நிவாரணம்

(நாவற்குழி)

தென்மராட்சிப் பிரிவில், பின்வரும் கிராமசேவையாளர் பிரிவில் உள்ளவர்களுக்கு நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி .வீதியில் உள்ள இலங்கை வங்கியில் மீளக்குடியமர்வு நிவாரணமும் சுயதொழில் வேலைவாய்ப்பு நிவாரணமும் வழங்கப்பட இருப்பதாக சாவகச்சேரி இலங்கை வங்கி முகாமையாளர் திரு. எம். வாமதேவா தெரிவித்தார்.

நிவாரணம் வழங்கப்பட இருக்கும் கிராமசேவையாளர் பிரிவுகள் வருமாறு:- சாவகச்சேரி கிழக்கு. நுணுவில், சரசாலை, கல்வயல், மீசாலை வடக்கு, அல்லாரை, கச்சாய், கைதடி தெற்கு, எழுதுமட்டுவாள் வடக்கு, விடத்தற்பளை, கொடிகாமம், எழுதுமட்டுவாள் தெற்கு, தனங்களப்பு, இடைக்குறிச்சி, மட்டுவில் தெற்கு, கைதடி - நுணுவில் என்பனவாகும்.

முன்னர் நிவாரணப் பணம் பெற்றுக்கொள்ளத் தவறியவர்களும் பெற்றுக்கொள்ளலாம் என்றும் இதுவே இறுதிச் சந்தர்ப்பம் என்றும் திரு. எம், வாமதேவா குறிப்பிட்டார். (107)

**மணிவாக்கு**

அறிவுக் குறையை ஈடுசெய்யவே மனிதன் ஆத்திரப்படுகிருன். — ஆன்ரேூர் வாக்கு.

# நமது நோக்கு

## அவர்களை அனுப்ப வேண்டுமா?

"இலங்கையிலுள்ள சுமார் ஒரு லட்சம் இந்திய வம்சாவழித் தோட்டத் தொழிலாளரை தற்போதுள்ள நிலையில் ஏற்றுக்கொள்ள முடியாது!" என தமிழ்நாடு முதல்வர் மு. கருணாநிதி கூறியுள்ளார்.

அண்மைக்காலமாக அவர் வெட்டொன்று துண்டு இரண்டு என்ற ரீதியில் கருத்துக்களை முன்வைத்து வருகிருர். அவரது கருத்துக்கள் இந்திய மத்திய அரசின் வெளியுறவுக்கொள்கை வகுப்பாளர்களுக்கு வழிகாட்டற் குறிப்புகளாக அமையவேண்டும்.

மலையகத் தமிழர் பிரச்சனை முடிக்கப்பட்ட கோவை (Closed File) என்ற மாயையை உருவாக்கப் பல முயற்சிகள் எடுக்கப்பட்டன. பிரசாரம் செய்யப்பட்டது.

ஆனல் அவர்கள் பிரச்சனை தீராத பிரச்சனையாக இருந்துவருகின்றது.

தமிழகத்திலிருந்து அழைத்துவரப்பட்ட தொழிலாளர்கள் பல இன்னல்களுக்கு மத்தியில் வாழ்ந்தவர்கள்; வாழ்ந்து வருபவர்கள்.

கடந்த இரு நூற்றண்டு காலமாக அவர்களது கடும் உழைப்பே அன்னியச் செலாவணியை ஈட்டித் தந்துகொண்டிருக்கின்றது.

குடியுரிமைச் சட்டங்கள் மூலம் பாதிக்கப்பட்டவர்கள் ஒப்பந்தங்கள் மூலமும், திருத்தச் சட்டங்கள் மூலமும் உரிமைகள் பல வழங்கப்பட்டதாகக் கூறினுலும் அவர்களது வாழ்க்கை வளமான வாழ்க்கையாக இன்னும் மாறவில்லை,

நாடற்றவர்கள் என்ற நிலையில் நீண்டகாலமிருந்து அரச சலுகைகளையே அனுபவிக்க முடியாது தவித்திருந்தனர்.

ஒப்பந்தங்களின் அடிப்படையில் இலங்கையில் எஞ்சியிருக்கும், இந்தியத் தோட்டத் தொழிலாளர்களை உடன் திருப்பி அழைத்துக்கொள்ளவேண்டும் என்று இலங்கைப் பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரஞ்சன் விஜயரத்தின வேண்டுகோள் விடுத்திருக்கிருர்.

போகவிருப்பவர்களுக்காக கப்பற்சேவையை ஆரம்பிக்கவேண்டுமென்று ஆலோசனை நடக்கிறது.

இலவச விமானச் சீட்டுக்களே வழங்கப்படுமெனக் கூறப்படுகிறது.

இக் கோரிக்கையை ஏற்கக் கூடாதென தமிழ்மக்களின் கட்சிகள் எதிர்ப்புக்குரல் கொடுத்திருக்கின்றன,

"இவர்கள் அனைவரும் இந் நாட்டுக் குடிமக்கள். இவர்களுக்கு இந் நாட்டுக் குடியுரிமை உடனடியாக வழங்கவேண்டும்; திருப்பி அனுப்பும் திட்டத்தை இலங்கை அரசு மறுபரிசீலனை செய்யவேண்டும்!"— இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி கோரியுள்ளது.

இந்தவேளையில்தான் தமிழக முதல்வரும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று ஆணித்தரமாக அறிவித்திருக்கிருர்.

சம்பந்தப்பட்ட மக்களையே கலந்தாலோசிக்காது செய்யப்பட்ட ஒப்பந்தங்கள் செல்லுபடியாகாதவை; எனவே இப் பிரச்சனை மீளாய்வுக்குரியது என்ற வாதமும் ஒலிக்கின்றது: இது சிந்தனைக்குரியதுதான்!

## வாழ்க என்றும்!

பூப்போன்ற ஞானநெஞ்சம் பிறரன் புக்குப்
பாலூட்டி வளர்த்தபார்வை பரிதி யஞ்சத்
தீப்பிழம்பும் நாணுகின்ற தூய்மை துன்பந்
தீர்க்கின்ற கருணையினில் தாய்தான் அகவற்
பாப்போன்ற கருத்தாழம் பெரும்ஆ லாகிப்
பரந்துகிளை யெறிந்தபோதும் பகைவ ருங்கை
கூப்பவைக்குந் திருக்கோலம் கண்டோம் தாங்கிக்
காத்துமறை ஒளியேற்று கால மெல்லாம்

*　　　*

தேனோடு அமுதூற்றித் தின்ன வைத்துத்
தருகின்ற சுகமெவர்க்குந் தெவிட்டா தேபோல்
நானேதான் வழியென்ற நல்ல செய்தி
நமக்களித்தார் இறையேசு நானி லத்தில்
ஊனேடு பொருளுயிரை உவந்தீந் தாலும்
அத்தலைவன் தரும்போற்றுக் கீடே யில்லை
வானுதய வெள்ளம்பார் வரலா றேந்தும்
வளமான தொண்டாற்றி வாழ்க என்றும்

**பாஷையூர் மு. சிங்கராயர்**

[இன்று யாழ். ஆயர் வ. தியோகுப்பிள்ளை அவர்கள் ஆயராகத் திருநிலைப்படுத்தப்பெற்ற நினைவுதினம்]

# இவ்லின் இரத்தினம்

## பல்லினப் பண்பாட்டு நிறுவனம்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகப் பின் வீதியில், அமைதியான சூழலில் கம்பீரமாகக் காட்சிதரும் இவ்லின் இரத்தினம் பல்லினப் பண்பாட்டியல் நிறுவனம் நேற்றுத் தன் ஒன்பதாவது ஆண்டை நிறைவு செய்தது. கலாநிதி ஜேம்ஸ் தேவதாசன் இரத்தினம் அவர்களால் தன் அன்பு மனைவி திருமதி இவ்லின் அம்மையார் அவர்களின் ஞாபகார்த்தமாக 1981ம் ஆண்டு மே மாதம் 10ம் நாள் நிறுவப்பட்ட இந்தப் பண்பாட்டியல் ஆய்வு நிறுவனம் கடந்த 9 ஆண்டுகளாகத் தமிழ்ப் பிரதேசத்தின் அறிஞர்கள் ஒன்றுகூடிஉரையாடும் களமாகஇயங்கிவருகின்றது. கலாநிதி ஜேம்ஸ்இரத்தினம் மானிப்பாயை பிறப்பிடமாக கொண்டவர். துணைவியார் கொழும்பைச் சேர்ந்தவர். பண்பாடு, வரலாற்ருய்வு வம்சாவழி பற்றிய ஆய்வுகளில் கலாநிதி இரத்தினம் காட்டிய ஆர்வம், அவரை இந்த நிறுவனத்தின் உயிர்நாடியாக விளங்கும் உசாத்துணை நூலகப் பிரிவைக் கட்டி எழுப்ப வகைசெய்தது. ஆரம்பத்தில் இந்த நூலகம் கொழும்பில் இயங்கிவந்தது. தென்னிலங்கை அறிஞர்கள் மட்டுமல்லாது பல பிறநாட்டு நல்லறிஞர்களினதும் தேவைகளைப் பூர்த்திசெய்துவந்த இவ்வறிவுக் களஞ்சியம், பிற்காலத்தில் அறிஞர் இரத்தினத்தின் தமிழ்ப் பற்றினதும், பிரதேசப் பற்றினதும் காரணமாக யாழ்ப்பாணத்திற்கு மாற்றப்பட்டது. சிறிதுகாலம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நூலகப் பிரிவு இயங்கியது. பின்னர் இன்றுள்ள தனிக் கட்டடத்திற்கு மாற்றப்பட்டுத் தன் சேவையைத் தொடர்கின்றது. இன்று சுமார் 10,000 நூல்களுடனும் வரலாற்ருய்வாளர்களுக்கும் பயன்தரத்தக்க அரிய பல கையெழுத்துப் பிரதிகளுடனும் தன் சேவையை வழங்கி வருகின்றது.

1986ம் ஆண்டுவரை கலாநிதி இரத்தினம் அவர்களுடைய பொறுப்பில் இயங்கி வந்த இந்நிறுவனம் பின்னர் அவரின் தொடர் சுகவீனம் காரணமாக 1986 இறுதிப் பகுதியில் யாழ்ப்பாணக் கல்லூரிக்குக் கையளிக்கப்பட்டது. அதன்பின் யாழ்ப்பாணக் கல்லூரியினுல் நியமிக்கப்பட்ட நிர்வாகக் குழுவொன்றினுல் இந்நிறுவனம் நிர்வகிக்கப்படுகின்றது. இதன்கௌரவ இயக்குநராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறைப் பேராசிரியர் கலாநிதி சி. பத்மநாதன் அவர்கள் சேவையாற்றுகின்ருர். நிறுவன நூலகராக திரு. என். செல்வராஜா அவர்கள் பணியாற்றுகின்ருர்.

நூலகச் சேவை தவிர இந்த நிறுவனம் மாதாந்தக் கருத்தரங்குகளையும், கலை நிகழ்ச்சிகளையும் ஒழுங்குசெய்து வருகின்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர்களினதும், பிற அறிஞர்களினதும் சொற்பொழிவுகளும், கருத்தரங்குகளும் இங்குஇடம் பெற்றுவருகின்றன 'டோபல்' ஆங்கில வகுப்புகளும் கடந்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிரையாளர்கள், மாணவர்கள் மாத்திரமன்றிப் பல்கலைக்கழகத்துக்கு வெளியேயுள்ள அறிஞர்களும் இந்நிறுவனத்தில் அங்கத்தவர்களாக உள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. நிறுவனத்தின் எதிர்காலத் திட்டங்களில் முக்கியமாகக் கருதப்படுவது பல்லினப் பண்பாட்டியல் சம்பந்தமான ஒரு தரமான அறிவியல் சஞ்சிகையினை வெளியிடுவதாகும். அதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கலாநிதி ஜேம்ஸ் இரத்தினம் அவர்கள் 1988 நவம்பரில் அமரரானதைத் தொடர்ந்து நவம்பர் 4ந் திகதி நிறுவுனர் தினமாக வழங்கப்படுகிறது. அன்றைய தினம் ஞாபகார்த்தச் சொற்பொழிவுகளை ஏற்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. முதலாவது சொற்பொழிவு கடந்த ஆண்டு 1989இல் இடம்பெற்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியர் கலாநிதி ஆ. வேலுப்பிள்ளை அவர்களின் உரை அன்றைய சிறப்பு நிகழ்ச்சியாக இடம் பெற்றது.

இந்நிறுவனத்தின் அங்கத்தவராகச் சேர்வதற்குக் கட்டுப்பாடுகள் கிடையாது. ஆர்வம் உள்ள எவருக்கும் இங்கு அனுமதி வழங்கப்படுகின்றது.

**என். செல்வராஜா**
நூலகர்

## சமயத்தை விளங்க வேண்டாமா?

**(1) பிரதோஷ விரதம் எப்போது எவ்வாறு அனுட்டிக்க வேண்டும்?**

இறைவன் ஆலகால விஷத்தையுண்டு தேவர்களுக்கு அருள் புரிந்து, நடனம் ஆடி நிட்டைகூடி இருந்த காலமே பிரதோஷ காலமாகும்.

வளர்பிறை, தேய்பிறையாகிய இரண்டு பருவத்தும் பதின்மூன்றும் நாளாகிய திரயோதசித் திதியிலே அனுட்டிக்கப்படும். ஐப்பசி. கார்த்திகை, சித்திரை, வைகாசி ஆகிய மாதங்கள் ஒன்றில் வரும் சனிப்பிரதோஷம் தொட்டு ஆரம்பிக்கப்படும்.

பகல் முழுவதும் உபவாசமிருந்து பிரதோஷ காலத்திலே சுவாமி தரிசனம் செய்து அதன் பின்னரே உணவருந்த வேண்டும்.

**(2) "உழவாரப் படையாளி" யார்? அப்பெயர் வரக்காரணம் என்ன?**

"தொண்டுக்கு அப்பர்" என்ற சிறப்புப்பெற்ற நாவுக்கரசரே அப்பெயர் பெற்றவர்.

அவர் கையில் எப்பொழுதும் உழவாரம் இருக்கும். கோயில்களின் சுற்றுப்புறப் புல் பூண்டுகளைச் செதுக்கி சுத்தம் செய்வார். தற்காலச் சிரமதானத்தின் முன்னேடி என்றே கூறலாம்;

**(3) பூசலார் நாயனுர் கட்டியகோயில் எது?**

காடவர் கோனுகிய பல்லவன் காஞ்சியிலே பெரும் பொருட் செலவில் கோவில் கட்டினுன். திருவுருவைக் கோயிலில் நாட்டுவதற்கு நாளும் குறித்துவிட்டான். அந்த நாளுக்கு முதல் நாளில் இறைவன் கனவிலே தோன்றி "நாளை பூசலார் அமைத்த ஆலயத்தில் எழுந்தருளவுள்ளேன், எனவே பிரதிட்டை செய்தலைத் ஒத்தி வைத்துக் கொள்க!" என்றிருக்கிருர்.

அரசன் பூசலார் கட்டிய கோவிலைத் தேடினுன். கோவிலைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அவரை நேரே சந்தித்து, ("ஆலயம் எங்கே)" எனக் கேட்டார். கோயிலை மனதிலேயே அமைத்துள்ளேன்; இன்று அக்கோயிலில் இறைவனை இருத்தவும் எண்ணினேன் என்ருர்.

பொருட்செலவில் ஆற்றும் பணியிலும் அன்புடன் ஒருமித்த மனத்துடன் ஆற்றும் பணியே சிறந்தது என்பது இதனுல் அறியக்கிடக்கின்றது.

தொகுப்பு:
—சி. கலையரசி

# பலதும் பத்தும்

### அவர்களும் கரகோஷம்

அது பொங்கல் தினம்— இராணுவ முகாமொன்றில் கைதிகளுக்கு விசேட பொங்கல் விருந்து

இதைவிட, செஞ்சிலுவைச் சங்கமும் சில பொருட்களை விநியோகிக்க ஏற்பாடு.

கைதிகள் தங்கும் அறை துப்பரவாக்கப்பட்டு, விசேட விரிப்புகள் போட்டு... அழகு படுத்தப் படுகின்றன...... வீடியோப் படப்பிடிப்புக்காக......!

கைதிகள் ஒழுங்காக வந்து வரிசையாக இருக்கிருர்கள்.

வீடியோக்காரர்கள் வருவதில் தாமதம்... ஒரு இராணுவ அதிகாரி அவர்களை உற்சாகப் படுத்துவதற்காக "பாட்டுப் பாடுங்களேன்...?" என்றிருக்கிருர்.

ஒருவர் பாடுகிருர்...! பாடல்மெட்டு......?

"ஒன்றே குலம் என்றே பாடுவோம்...! என்ற திரைப்பாடலின் மெட்டு!

கேட்கவா வேண்டும்...! இராணுவ அதிகாரி கைதட்ட, இராணுவ வீரர்களும் ஆரவாரமாகக் கைதட்டுகிருர்கள், பாடலின் கருத்து என்னவென்று புரியாமல்...!


சரி, பாடல் என்ன...?

"தமிழீழமே தீர்வு
என்று சொல்லுவோம்!
உயிர் போகும் வரை
உறுதியுடன் பாடுவோம்!"

### யார் பணம்?

வடலியடைப்பு அரசடிச் சந்தியில் 9-5-90 புதன் காலை ஒரு குறிப்பிட்ட தொகைப் பணத்தைத் தொலைத்தவர் யார்? அச்சந்தியிலிருந்து கோவிலுக்குச் செல்லும் வீதியில் வசிக்கும் ஆசிரியர் சி. இரகுநாதனுடன் தொடர்பு கொண்டு தகுந்த அடையாளம் கூறிப் பணத்தைப் பெற்றுக் கொள்ளவும். பெருமனத்துடன் தகவல் தந்த ஆசிரியருக்கு நன்றி.

வாணி



இலங்கை வர்த்தக வங்கியின் யாழ். கிளையில் புதுவருட தினத்தன்று கைவிசேஷ நிகழ்ச்சி மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படத்தையே இங்கு காண்கிறீர்கள். படத்தில் நல்லை ஆதீன குரு மஹா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, கிளை முகாமையாளர் திரு. எஸ். இராகவன், உதவி முகாமையாளர் திரு. ஆர். வெங்கட்ராமன் ஆகியோர் காணப்படுகின்றனர்.

## தேனிசை செல்லப்பா கிளிநொச்சியில் 15-ல் இசை நிகழ்ச்சி

(கிளிநொச்சி)

தமிழக எழுச்சிப் பாடகர் தேனிசை செல்லப்பாவின் இசை நிகழ்ச்சி, எதிர்வரும் 15ந் திகதி செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய விளையாட்டுத் திடலில் இடம்பெறும்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர், தேனிசை செல்லப்பாவின் இசை நிகழ்ச்சியின்போது சிறப்புரையாற்றுவதுடன், இவ்விழாவில் தேனிசை செல்லப்பா கௌரவிக்கப்படுவார். (83)

# கிழக்குச் செய்திகள்

### கலை இலக்கிய வட்டம்

'தமிழ் எழுத்தாளர்கள் கலைஞர்களிடம் பிரதேசவேறுபாடு இருக்கக் கூடாது. அவர்கள் பொதுவானவர்கள் சமூகத்துக்கு சேவை செய்பவர்கள்'.

இவ்வாறு திருகோணமலை பொது நூலக மண்டபத்தில் நடைபெற்ற கலை இலக்கிய வட்ட அமைப்பின் அங்குரார்பண கூட்ட வைபவத்தில் டாக்டர் மா. வசந்தமாலா குறிப்பிட்டார்.

மேலும் இவ் அங்குரார்ப்பண கூட்டத்தில் பண்டிதர் இ. வைரமுத்து, புரட்சிபானன் ஆகியோரும் பேசினர். (ம)

### புனரமைப்புக் கடன்

புனர்வாழ்வு புனரமைப்புக் கடன் மட்டக்களப்பு மாவட்டத்திலேயே கூடுதலாக வழங்கப்பட்டுள்ளது. வீதி திருத்தவும், விவசாய உபகரணங்கள் வாங்கவும் கிடைத்த 547விண்ணப்பங்களில் 225 விண்ணப்பங்களுக்கு சுமார் ஒருகோடி ரூபா கடனாக வழங்கப்பட்டுள்ளது. (ம)

### மக்கள் வங்கியில் பணக்கொடுக்கல் வாங்கல்

கிழக்குமாகாணத்தில்மக்கள் வங்கிக் கிளைகளில் மீண்டும் பணக்கொடுக்கல் வாங்கல் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது. இம்மாத இறுதிக்குள் இக்கொக்கல் வாங்கல் நடைபெறக்கூடும் என மட்டக்களப்பு பிராந்திய மக்கள்வங்கி முகாமையாளர் எம். லீலானந்தன் தெரிவித்தார். (ம)

### பயிலுநர் ஆசிரியரின் சம்பளம்

திருகோணமலையிலுள்ள பயிலுனர் ஆசிரியர்களுக்கு இதுவரை சம்பளம் கொடுக்கப்படவில்லை. இதை அறிந்த திருகோணமலை மாவட்ட பணிப்பாளர் திரு. கே. தியாகராசா திருகோணமலை, மூதூர், கந்தளாய் முதலிய உதவிக் கல்விப் பணிப்பாளர் அலுவலகங்களுக்கு தாமதியாது சம்பளத்தை வழங்குமாறு பணித்துள்ளார். (ம)

## "சமூகத்தில் பாடசாலையின் பங்கு தனியானது"

(நாவற்குழி)

''பாடசாலை, சமூகத்தில் தனிப்பங்கு வகிக்கிறது. ஒரு கிராமத்தில் கோயில் எவ்வாறு முதன்மை பெறுகின்றதோ, அதே போலத்தான் பாடசாலையும் முக்கியமடைகின்றது. அவை இரண்டும் ஒரு கிராமத்தின் இரண்டு கண்களாகும்''.

இவ்வாறு நாவற்குழி மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற தமிழ்தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. சீ. தியாகராசா தெரிவித்தார்.

வித்தியாலய அதிபர் திரு. த. முத்துக்குமாரசாமி தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் திரு. தியாகராசா தொடர்ந்து பேசுகையில், இன்று இங்கு திறக்கப்பட்டிருக்கும் சைக்கிள் நிறுத்தும் இடத்தை ஒழுங்காகப் பயன்படுத்துவதுடன் மட்டும் நின்றுவிடாது. மிகவும் முக்கியமாக வீதிகளில் மாணவர்கள் செல்லும் போதும் வீதி ஒழுங்கையும் மாணவர்கள் கடைபிடிக்க வேண்டும். ஒன்றிணைந்த பாடத்திட்டத்திற்கு வசதியான வகுப்பறைகள் தேவை அதை முழுமையாக திணைக்களத்தை நம்பியிராமல் நலன் விரும்பிகள், பெற்றோர்கள், கொடைவள்ளல்கள் முன் வந்து செய்யவேண்டும்.

வித்தியாலய அரங்கில் நடைபெற்ற இவ்விழாவின் சிறப்புவிருந்தினரான பெனின்சுலா குறூப் பொது முகாமையாளர்திரு. சீ. ஸ்ரீஸ்கந்தகுமார் பேசுகையில்பாடசாலை வளர்ச்சியடைந்தால் தான் மாணவர்கள் வளர்ச்சியடைய முடியும். அதற்காகப் பாடசாலைக்கு தேவையான சில வசதிகள் செய்துகொடுக்கப்படவேண்டும் எனக்கூறி பெனின்சுலா குறூப்பினால் மேற்படி வித்தியாலயத்திற்கு வழங்கப்பட்ட பதினையாயிரம் ரூபா பெறுமதியான ஒலிபெருக்கி சாதனங்களை யாழ். கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு. சீ. தியாகராசாவிடம் கையளித்தார்.

பெனின்சுலா குறூப் நிறுவனத்தினால் நாவற்குழி மகா வித்தியாலய மாணவியான செல்வி பாலசிங்கம் பத்மவதனிக்கு வழங்கப்பட்ட புலமைப்பரிசில்காசோலையும் திரு. சிறீஸ்கந்தகுமாரினால் மேடையில் வைத்து வழங்கப்பட்டது.

மனிதாபிமான பொருளாதார புனருத்தாரண அபிவிருத்தி சேவை நிலையப்பணிப்பாளர் திரு. மு. நாகராசா பேசுகையில்; மாணவர்களின் முன்னேற்றத்திற்கு மிகவும் அத்தியாவசியமானசிலதேவைகளை ஆராய்ந்து எமது ஸ்தாபனம் செயற்படுகின்றது எனவும் அதனடிப்படையிலேயே இப்பாடசாலைக்கு 25X20 அடி வகுப்பறையொன்று கட்டுவதற்கும் தற்போது ஒரு மண்டபம் மூடி அடிப்பதற்கும் எமது நிறுவனம் இவ்வித்தியாலயத்திற்கு உதவியது என்றும் குறிப்பிட்டார். கைதடி கொத்தணிஅதிபர் திரு. சோ. கணேசலிங்கம், திரு. த. தவராசா, திரு. செ. நடேசன் ஆகியோரும் இவ்விழாவின் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

விழாமுடிவில் பாடசாலை மாணவிகள் பங்குபற்றிய கலை நிகழ்ச்சிகளும் பாடசாலை மாணவிகளினால் அரங்கேற்றப்பட்ட 'காத்தவராயன்' என்னும் நாடகமும், ஆசிரியர்கள் பங்குகொண்ட பட்டிமன்றமும் நடைபெற்றது. (107)

## வீடமைப்பு நிதிஉதவி

(மானிப்பாய்)

ஆனைக்கோட்டை கிராம சேவையாளர் பிரிவில் வீடமைப்பதற்கான நன்கொடைப் பணம் ரூபா பதினையாயிரம் வழங்கப்படவுள்ளது.

இதனைப் பெறுவதற்கு சொந்தக்காணியற்றவர்கள் மாத்திரம் ஆனைக்கோட்டை 3-ம் கட்டையடியிலுள்ள உதயதாரகை சனசமூக நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அதன் செயலாளர் திரு. வி. பாலச்சந்திரன் கேட்டுள்ளார். (71)

## இராசி பலன்

11 - 5 - 1990

வெள்ளிக்கிழமை

மேடம்: ஏமாற்றம், பழிச்சொல், அற்பர் நேசம், வைத்தியச் செலவு.

இடபம்; தொந்தரவு, சமயோசிதம், உழைப்புச் சிறப்பு, பணவரவு.

மிதுனம்: நன்மதிப்பு, கடன் தொல்லை, சாஸ்திர விருப்பு.

கடகம்: வைராக்கியம், பணச் செலவு, தொழில் சிறப்பு, தெய்வீகம்.

சிங்கம்: குடும்பசுகம், சகோதர எதிர்ப்பு, தெய்வக் கோவிலுக்குச் செலவு.

கன்னி: உடல் உபாதை, பயந்த சுபாவம், கௌரவக் குறைவு, தூரத்துச் செய்திகள்.

துலாம்; உழைப்புச் சிறப்பு, புதிய சேர்க்கை, உற்சாகம், நண்பர் விரோதம்.

விருச்சிகம்: மனநிம்மதி, தொந்தரவு செய்பவர்களை இனம் காணுதல்.

தனுசு; அற்பர் நேசம், மனோதிடம், வைத்தியம்.

மகரம்: பிரயாணப் பேச்சு, சமூக சேவை, மறதி, செலவு.

கும்பம்: பொய் பேசுதல், தொழில் மந்தம், குடும்ப சுகம்.

மீனம்: ஆலயச் செலவு, முயற்சி வெற்றி, காலதாமதம், மனச்சஞ்சலம்.

இ. மகாதேவா

## பரு. மெதடிஸ்த கல்லூரியை அபிவிருத்தி கல்லூரியாக்க கல்வி அமைச்சரிடம் மகஜர்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை மெதடிஸ்த பெணகள் உயர்தரக் கல்லூரியை அபிவிருத்திக் கல்லூரியாக தரமுயர்த்துமாறு கல்லூரியின் அபிவிருத்திச்சபை கல்வி, உயர்கல்வி அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலியிடம் கோரியுள்ளது.

இக் கல்லூரியைத் தரமுயர்த்துவது சம்பந்தமாக கல்லூரியின் அபிவிருத்திச்சபையால் அமைச்சர் அத்துலத் முதலிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது; வடமராட்சிப் பகுதியில் உள்ள மிக முக்கிய பெண்கள் கல்லூரியாக பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரி திகழ்கின்றது. இக் கல்லூரி பருத்தித்துறை, உடுப்பிட்டித் தொகுதிகளுக்கு மட்டுமன்றி இன்னும் பல தொகுதிகளைச் சேர்ந்த மாணவிகளுக்கு அருஞ்சேவையாற்றி வருகின்றது. 1878ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரி தொடர்ந்து தனது தனித்துவத்தைப் பேணி கல்வி உலகில் பல அரிய சாதனைகளை நிலைநாட்டி வருகின்றது. பல்வேறு பகுதிகளிலும் உள்ள பெண்கள் இக் கல்லூரியில் கல்விகற்று சிறந்த பிரஜைகளாக வெளியேறியுள்ளனர். இக்கல்லூரியிலிருந்து வெளியேறிய பெருந்தொகையான

(7ம் பக்கம் பார்க்க)

## "கிராமிய குழுக்கள் மூலம் மனிதசக்தி, மூலவளங்கள் அபிவிருத்திக்கு பயன்படுகிறது" - யாழ். றொட்டறி கழகத் தலைவர்

(பண்டத்தரிப்பு)

''உலக நாடுகள் பலவற்றில் றோட்டறிக்கழகம் பல்வேறு சமூகப்பணிகளை செயல்படுத்தி வருகின்றது. சமுதாயத்தின் கஷ்டங்களை நீக்கவும், வசதி குறைந்த மக்களின் நல்வாழ்வுக்கும் தொண்டாற்றுவதே இக்கழகத்தின் குறிக்கோளாகும். இதற்கிணங்க எமது கழகம் கிராமியக் குழுக்களை நிறுவி அதன் மூலம் மனித சக்தியையும், மூல வளங்களையும் பயன்படுத்தி அபிவிருத்தியடைவதற்கான திட்டங்களை செயற்படுத்தி வருகின்றது.

இவ்வாறு பண்டத்தரிப்பு றோட்டறிக் கிராமியக் குழுவின் அங்குரார்ப்பண பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ்ப்பாண றோட்டறிக் கழகத் தலைவர் திரு. எஸ். செல்வநாதன் குறிப்பிட்டார்.

திரு. ச. செல்வரத்தினம் தலைமையில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் கழக செயலாளர் திரு. உருத்திரங்கம் உரையாற்றுகையில் றோட்டறிக் கிராமியக் குழுக்களின் அமைப்பு முறை பற்றியும் செயற்திட்டங்கள் பற்றியும் விளக்கிக் கூறினார். சர்வோதய இயக்க யாழ். மாவட்டத்தலைவர் திரு. கா. திருநாவுக்கரசு உரையாற்றுகையில் எமது கிராமங்களில் வேலை வாய்ப்புகளை உருவாக்கவும், அபிவிருத்தி வேலைகளை ஆரம்பிக்கவும், மூல வளங்களை நன்கு பயன்படுத்தப்படவேண்டும் என்றும் மனித சக்தியை நல்ல முறையில் பயன்படுத்தினால் பல திட்டங்களை செயற்படுத்த முடியும் என்றும் குறுப்பிட்டார்.

பண்டத்தரிப்பு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு. ஏ. வி. துரையப்பா திரு. சி. கனகசுந்தரம் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

தமிழ் நாட்டிலுள்ள தென் மதுரை றோட்டறிக் கழகத்தினால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட மூன்று சில்லு சைக்கிள் வண்டியொன்றை பண்டத்தரிப்பு பிரான்பற்றை சேர்ந்த கால் ஊனமுற்றவரான திரு. துரைராசா என்பவருக்கு யாழ். றோட்டறிக்கழகத்தலைவர் திரு. செல்வநாதன் இக் கூட்டத்தில் அன்பளிப்பு செய்தார்.

# தொலைபேசிக் கட்டணங்களை

## வங்கிகள் ஊடாகவும் செலுத்தலாம்

[கொழும்பு]

தொலைபேசி பாவனையாளர்கள் தாம் செலுத்தவேண்டிய தொலைபேசிக் கட்டணங்களை இலங்கை வங்கி, மக்கள் வங்கி, ஆகியவற்றின் ஊடாகவும் செலுத்தலாம்.

இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தபால், தொலைபேசித் தொடர்புகள் அமைச்சு அறிவித்துள்ளது.

தொலைத் தொடர்பு நிலையத்தின் கட்டணப் பட்டியல் தயாரிக்கும்நிலையங்கள் திணைக்களத் தலைமை அலுவலகத்திலுள்ள பணக் கொடுப்பனவு கரும பீடம் ஆகியவற்றின் மூலமாகவே இதுவரை தொலைபேசிக் கட்டணங்கள் ஏற்கப்பட்டு வந்தன.

இப்பொழுது இவற்றுக்கும் மேலாக மக்கள் வங்கி, இலங்கை வங்கி ஆகியவற்றின் மூலமும் கட்டணங்களைச் செலுத்துவதற்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது.

---

சாவகச்சேரிக்கு

## அரச அதிபர் 14-ம் திகதி உத்தியோகபூர்வ விஜயம்

(மட்டுவில்)

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் இம்மாதம் 14ம் திகதி உத்தியோகபூர்வமானவிஜயம் ஒன்றை மேற்கொள்வார்.

இந்த உத்தியோகபூர்வமான விஜயத்தின்போது தென்மராட்சிப் பகுதியைச் சேர்ந்த கிராமச் அபிருத்தி சங்கங்களின் உறுப்பினர்கள். சனசமூகநிலையங்களின் உறுப்பினர்கள், தமது பகுதிகளின் அபிவிருத்திகள் பற்றி சந்தித்து கலந்தாலோசிக்க ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது. பொது ஸ்தாபனங்கள் மகஜர்களும் கையளிக்கலாம்.

இங்கு விஜயம்செய்யும் அரசாங்க அதிபர் தென்மராட்சிப் பகுதியின் அபிவிருத்தி சம்பந்தமாகவும் பல இடங்களையும் சுற்றிப் பார்வையுடவுள்ளார். (82)

---

## பயிற்சிக் கருத்தரங்கு

[பண்டத்தரிப்பு]

இலங்கை குடும்பத்திட்டச் சங்கம் காலையடி. சாந்தை ஆகிய இருகிராமங்களைச் சேர்ந்த சுகாதார தொண்டர்களுக்கு மூன்று நாள் பயிற்சிக் கருத்தரங்கு ஒன்றை பண்ணகம் வடக்கு அமெரிக்கமிஷன் த. க. பாடசாலையில் கடந்த வாரம் நடாத்தியது.

குடும்பக்கட்டுப்பாடு, தாய், சேய் நலன் ஆகிய பல்வேறு துறைகளில் பயிற்சிகள் வழங்கப்பட்டன. இதற்கான ஒழுங்குகளை இலங்கை குடும்பத்திட்டச்சங்க யாழ். பிரதேச பொறுப்பாளர் திரு. எஸ். அன்பானந்தன் செய்திருந்தார்.

---

## முதலுதவி பயிற்சி

(கொக்குவில்)

சர்வதேச சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் பயிற்சி வகுப்பொன்று கொக்குவில் மேற்கு இளைஞர் கழகத்தின் அனுசரணையுடன் நடாத்தப்படவுள்ளது,

இதில் பதினைந்து வயதிற்கு மேற்பட்ட ஆண்களும், பெண்களுமாகச் சுமார் முப்பதிற்கும் மேற்பட்டோர் பயிற்சி பெற முன்வந்திருப்பதாக அறியப்படுகின்றது. முன்பும் பல தடவை இப்படியாகப் பயிற்சிபெற வகுப்புகள் நடந்து பலருக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

---

## வருடாந்த உற்சவம்

(புங்குடுதீவு)

தீவுப்பகுதியில் பிரசித்தி பெற்ற கிறிஸ்தவர்களின் வழிபாட்டுத் தலங்களில் ஒன்றான புங்குடுதீவு புனித. பிரான்சீஸ் சவேரியார் தேவாலய வருடாந்த உற்சவம் இன்று 11-ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்களில் திருவழிபாடுகள் நடைபெறும்.

உற்சவ காலத்தில் வழிபாடுகள் மாலை ஐந்து மணிக்குச் செபமாலையுடன் ஆரம்பமாகும்.

இவ்வுற்சவங்கள் அனைத்தும் பங்குத் தந்தை அருள்திரு. நீக்கிலஸ்–குறூஸ் அடிகள் தலைமையில் நடைபெறும்

ஒன்பதாம் நாள் நற்கருணை வழிபாடும், மறுநாள் காலை 20–ம் திகதி திருப்பலி பூசையும், புனித. சவேரியாரின் திருச்சுரூப பவனியும் இடம் பெறும். [101]

---

# தமிழினத்தின் ஒரே ஒரு மூலதனம் ஒற்றுமைதான்

### - பாப்பா

(மட்டுவில்)

''படித்துப் பட்டம் பெற்றதும் வெளிநாடுகளுக்குச் சென்று விடுகிறார்கள். இந்த நிலையில் இது போன்றபெரிய வைத்தியசாலைகளில் ஊழியர் பற்றுக்குறை ஏற்படுவது தவிர்க்க முடியாது.

''ஊழியர்பற்றுக்குறை காரணமாக ஏற்படும் பல குறைகளை வைத்துக் கொண்டு நிர்வாகத்தைக் குறை கூறுவது ஏற்றதல்ல.''

இவ்வாறு தொற்று நோயியல் அதிகாரி மருத்துவ கலாநிதி சிவபாதம் சாவகச்சேரி வைத்தியசாலை நோயாளர் நலன்புரி சங்கம் பணிமனை திறப்பு விழாவின்போது கூறினார்.

சாவகச்சேரி நகரசபை விசேட ஆணையாளர் திரு. த. நவரத்தினராஜா தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் டாக்டர் சிவபாதம் மேலும் பேசுகையில் கூறியதாவது;

இந்தச் சங்கம் நோயாளர் நலன்புரி சங்கம் என்ற பெயரில் இல்லாமல், வைத்தியசாலை குழு, அல்லது வைத்தியசாலை அபிவிருத்திக்குழு என்ற பெயரில இருந்தால், இந்த வைத்தியசாலையின் அபிவிருத்திகளை மேற் கொள்ள பல வசதிகள் உண்டு என்றார்.

உதவி அரசாங்க அதிபர் திரு. பு. சுந்தரம்பிள்ளை பேசுகையில், இந்த ஆஸ்பத்திரிக்கு வெளிநோயாளர்களுக்கான கட்டிடம் ஒன்று அவசியம். அதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுகிறேன். இந்த வைத்தியசாலை நோயாளர் பொது மக்கள் ஆகியமும்முனைகளுக்குமிடையில் ஒரு பாலமாக அமையவேண்டும். ஊழியர்கள் தமது ஊதியத்தையே நோக்காக கொள்ளாது, தமது ஒரு தொண்டு என்று கருதி சேவை மனப்பான்மையுடன் சேவைசெய்ய வேண்டும் என்றார்.

விடுதலை புலிகள் மக்கள் முன்னணி தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர் திரு. கே. பாப்பா பேசுகையில் கூறியதாவது:

தமிழினத்தின் ஒரே ஒரு மூலதனம் ஒற்றுமை ஒன்றுதான். இந்த ஒற்றுமையின் அடிப்படையிலேயே நாம் எமது உரிமைகளை வென்றெடுக்க முடியும்.

இன்று எமக்கு ஓர் அமைதியான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இச் சூழ்நிலையை சாதுரியமாகப் பயன்படுத்த வேண்டும். எமது போராட்டத்தின் வரலாற்றை நோக்கினாலும் எமது தமிழினத்தின் ஒற்றுமையின் அடிப்படையிலே வெற்றிகள் அடைந்துள்ளோம் என்றார்.

வைத்தியசாலை லிகிதர் திரு. தனபாலசிங்கம் பேசுகையில், இந்த ஆஸ்பத்திரியில் கடந்த 9 மாதங்களாக மாவட்ட வைத்திய அதிகாரி இல்லை. ஊழியர் மேற்பார்வையாளர் இல்லை. ஒரு மேற்றன் இல்லை. இந்த நிலையில் தலைமைத்துவம் இல்லாத ஸ்தாபனம் எப்படி ஒழுங்காக நடைபெற முடியும். இந்த நிலையில்தான் இந்த ஆஸ்பத்திரியில் மருந்து தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

சாவகச்சேரி ஆஸ்பத்திரி நோயாளர் நலன்புரி சங்கத்தின் செயலாளர் திரு. சின்னத்தம்பி நன்றி கூறினார். (82)

---

## இன்று

(உடுவில்)

சங்குவேலி வெட்டுக்கட்டை ஸ்ரீசித்திவிநாயகர் கோவில் 13வது ஆண்டு சங்காபிஷேக மணவாளக்கோல விழா இன்று நடைபெற உள்ளது.

விநாயகருக்கு சகஸ்ர சங்காபிஷேகமும் பரிவார மூர்த்திகளுக்கு அஸ்டோத்தர சதசங்காபிஷேகமும் நடைபெறும்.

இன்று நண்பகல் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

இரவு திருக்கல்யாணம் திருவூஞ்சல் நடைபெறும் பிரம்மஸ்ரீ ப.நித்தியானந்தநடராஜக் குருக்கள் மேற்படி கிரியைகளை நடாத்திவைப்பார். (109)

---

அசம்பாவிதங்களினால்

## சிறுவர் நூலக தளபாடம், நூல்கள் சேதம்!

(உடுவில்)

அசம்பாவிதங்களினால் வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் உடுவில் அலுவலக சிறுவர் நூல்நிலையத்துக்கு சொந்தமான நூல்கள் தளபாடங்கள் பலவும் சேதமாக்கப்பட்டும் அழிக்கப்பட்டும் உள்ளன.

நாலாயிரத்துக்கு மேற்பட்ட பலதரப்பட்ட நூல்களை சொந்தமாகக் கொண்டிருந்த இச்சிறுவர் நூலகத்தில் தற்போது 775 புத்தகங்கள் மட்டுமே எஞ்சியுள்ளன.

இதனால் இந்நூலகத்துக்கு வேண்டிய பயனுள்ள நூல்களை இப்பகுதியைச் சேர்ந்த மக்களிடம் சென்று சேகரிக்கப்பட உள்ளது.

நூலகத்துக்குரிய தளபாடங்கள் பல காணாமல் போயுள்ளன. சுன்னாகம் பொதுசன நூல் நிலையத்தின் சில தளபாடங்கள் தற்காலிகமாக இரவலாகப் பெறப்பட்டு தற்போது நூலகம் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

இங்கு கடமையாற்றி வந்த பதில் கடமை பரிசாரகர்பதவி உயர்வு பெற்றுச் சென்றுவிட்டார். இவரது இடத்துக்கு எவரும் இதுவரை நியமிக்கப்படவில்லை. தற்காலிகமாக கடமையாற்றும் இரு ஊழியர்கள் கூட தினமும் ஆறுமணி நேரம கடமைபுரிவதால் அவர்கள் தம் சொந்தஅலுவல்களைக் கூட கவனிக்க முடியாத நிலையில் உள்ளனர்.

பதில் கடமைக்கு ஒருவர் நியமிக்கப்பட்டவுடன் கிழமையில் ஏழு நாட்களும் நூலகத்தை திறந்து வைத்து வாசகர்களுக்கு வசதிகள் செய்து தரப்படும் என உப அலுவலக பொறுப்பதிகாரி திரு. இ. கணேஸ்வரன் உறுதியளித்துள்ளார். (109)

---

சாவகச்சேரியில்

## கிராமியவீடமைப்புகடன்பெற மக்கள் பலத்த போட்டி!

(மட்டுவில்)

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் பதினைந்து லட்சம் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் கிராமிய வீடமைப்புக் கடன் பெறுவதற்கான விண்ணப்பதாரர்களைப் பதிவு செய்யும் வேலைகள் சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பணி மனையில் ஆரம்பித்துள்ளது.

இதைத்தொடர்ந்து சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் மக்கள் முற்றுகையிட்டுள்ளனர். தினமும் படிவம் பெறுவதிற் பலத்த போட்டி ஏற்படுகின்றது:

இதனால் கடன் பெறுவோர் பட்டியலைப் பதிவு செய்யும் உத்தியோகத்தரே சமாளிக்க முடியாத அளவுக்கு மக்கள் கூட்டம் வாசலில் நிரம்பிக் காணப்படுகின்றது.

இந்த விண்ணப்பதாரரின் பட்டியல் பதிவுசெய்து படிவம் வழங்கும் வைபவம் தொடர்ந்து 23ம் திகதி வரை நடைபெறும்.

இது சகல உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளிலும் நடைபெறுகிறது.

தேசிய அடையாளஅட்டை, குடும்ப பதிவு அட்டை ஆகியவற்றை மட்டும் எடுத்துச் செல்லவேண்டும்.

18 வயதிற்கு மேற்பட்டவரும் 50 வயதிற்கு உட்பட்டவருக்கும், மாதாந்த குடும்ப வருமானம் 2400 ரூபாவுக்கு உட்பட்டவராகவும், புனர்வாழ்வு, புனரமைப்பு திட்டத்தின் கீழ் கடன்பெற சிபார்சு செய்யப்பட்டவராகவும் இருந்தால் அவர் இக்கடனைப்பெறுவதற்குஉரிமையுள்ளவராவர்.

எனவே பொதுமக்கள் எதுவித பதட்டமும் இன்றி அமைதியாக குறிப்பிட்ட 23ம் திகதிக்குள் தமது பெயரைப் பதிவுசெய்து தமது கடனுக்கான படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்று உதவி அரசாங்க அதிபர் திரு. பு. சுந்தரம்பிள்ளை தெரிவிக்கிறார். (82)

---

## கசூரினா கடற்கரையில் உல்லாசப் பிரியர்கள்

(உடுவில்)

பெருமளவு இளைஞர்களும் உல்லாசப் பிரியர்களும் தற்போது தினமும் காரைநகரில் உள்ள கசூரினா கடற்கரைக்கு படையெடுத்து வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

சனி, ஞாயிறு, மற்றும் விடுமுறை நாட்களில் யாழ்ப்பாணக்குடா நாட்டின் பல பகுதிகளிலும் இருந்து மினிவான்கள், கார்கள் மோட்டார் சைக்கிள்கள் ஆகியவற்றில் சாரி சாரியாக மக்கள் கடற்கரையை நோக்கி வருகின்றனர்.

குளிப்பதற்கேற்ற மணற்பாங்கான கடல் பகுதியும் இயற்கை வனப்பு மிகுந்த சவுக்கு மரங்களும், மணற்திட்டுக்களும் உல்லாசப் பயணிகளை கவர்ந்து தினமும் அங்கு வரவழைக்கின்றன.

கூடிய அளவில் இளைஞர்கள் இப்பகுதிக்கு விஜயம் செய்து கடலில் குளித்து மகிழ்வதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. (109)

---

## கலாசாரப் போட்டிகள் நடாத்த ஏற்பாடு


(நாவற்குழி)

யாழ். மாநகரசபை சனசமூக நிலையங்களின் சமாசத்தின் கல்வி, கலை, கலாச்சாரக் குழுவினால் கட்டுரைப் போட்டி, கவிதைப்போட்டி, சிறுகதைப்போட்டி, ஓவியப் போட்டி, நாடகப்போட்டி என்பன நடாத்தப்படவுள்ளன.

மேற்கூறப்பட்ட இந்தப் போட்டிகளில் நாடகப் போட்டி அகில இலங்கை ரீதியாகவும், ஏனைய நான்கு போட்டிகளும் சமாசத்தின் கீழுள்ள சனசமூக நிலைய உறுப்பினர்கள் மத்தியிலும் நடாத்தப்படவுள்ளன. இதற்கான விண்ணப்ப முடிவு திகதி இம்மாதம் 30ந் திகதியாகும்.

சிவன்பண்ணை வீதியில் 23ம் இலக்கத்தில் அமைந்திருக்கும் சமாச அலுவலகத்தோடு தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைப்பெற்றுக்கொள்ள

(7-ம் பக்கம் பார்க்க)



## பாடும்மீன் கழகம் நடத்தும் ‘தூயஒளி’ வெற்றிக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவில் கொலைசெய்யப்பட்ட 31 குருநகர் மீனவர்களின் ஞாபகார்த்தமாக ‘தூயஒளி’ வெற்றிக்கிண்ணத்துக்கான 3-வது வருடாந்த உதைபந்தாட்ட ‘நொக்கவுட் போட்டி’ இம்மாத இறுதியில் நடைபெறவுள்ளது.

‘யாழ். உதைபந்தாட்ட லீக்’கின் அனுசரணையுடன், குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகம் நடாத்தும் இந்தப் போட்டி இம்முறை வடமாகாண ரீதியில் நடைபெறவுள்ளது. பருத்தித்துறை, கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக்குகளுடன் இணைந்துள்ள விளையாட்டுக் கழகங்களும் இப்போட்டியில் கலந்து கொள்கின்றன.

நாட்டின் நிலைமை சீரில்லாததால் கடந்த இரு வருடங்களும் இப்போட்டியை உள்ளூர் விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்தப்பட்டு வந்தது. தற்போது நிலைமை சீரடைந்துள்ளதால், இம்முறை இப்போட்டி வடமாகாண ரீதியில் நடாத்தப்பட இருப்பதாக பாடும்மீன் விளையாட்டுக்கழக காரியதரிசி திரு. பெனடிற் ராதா தெரிவித்தார்.

முதல் தடவையாக நடாத்தப்பட்ட இப்போட்டியில், யாழ்ப்பாணம் முஸ்லீம் விளையாட்டுக் கழகமும், 2-வது வருடம் நடாத்தப்பட்ட போட்டியில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழகமும் சாம்பியன்களாக தெரிவு செய்யப்பட்டன.

இம்முறை இப்போட்டியில் வெற்றி பெறும் விளையாட்டுக் கழகத்துக்கு ஆயிரம் ரூபா ரொக்கப் பணமும் சாம்பியன் கிண்ணமும், தூயஒளி’ சலஞ் கிண்ணமும் பரிசளிக்கப்படும். 2-வது இடத்தைப் பெறும் கழகத்துக்கு 500 ரூபா ரொக்கப் பணமும் வெற்றிக் கிண்ணமும் பரிசளிக்கப்படும்.

பாடும்மீன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவிருக்கும் மேற்படி நொக்கவு போட்டியில் பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக் கழகங்கள், பாடும்மீன் விளையாட்டுக் கழக காரியதரிசி திரு. பெனடிற் ராதாவுடன் தொடர்பு கொள்ளும்படியும் கேட்கப்பட்டுள்ளார்கள். (வி)

### கலாசாரப்

(6-ம்பக்கத் தொடர்ச்சி)

லாம்.

இந்தப்போட்டி சம்பந்தமான நடவடிக்கைகளை சமாசத்தின் கல்வி, கலை, கலாசாரக்குழுத்தலைவர் கவிஞர் தேவதாசனும், செயலாளர் திரு. இ. இரவீந்திரராசாவும் மேற்கொண்டுள்ளனர். (157)

### பரு. மெதடிஸ்த

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர்கள் பல்கலைக்கழகங்களில் புகுந்து இன்று பல்வேறு துறைகளிலும் உன்னத நிலைகளில் இருக்கின்றனர்.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியை ஆண்களுக்கான அபிவிருத்திக் கல்லூரியாகத் தரமுயர்த்தியது போன்று பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரியையும் பெண்களுக்கான அபிவிருத்திக் கல்லூரியாகத் தரமுயர்த்தி பெண்களுக்கும் உதவவேண்டும்.

இம்மகஜரின் பிரதிகள் கல்வி திட்டமிடல் அமைச்சர் ஜனப் ஏ. சீ. எஸ். ஹமீத், கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி இராஜமனோகரி புலேந்திரன், கல்விச் சேவைகள் அமைச்சர் திருமதி சுனித்திரா ரணசிங்கா, கல்வி இராஜாங்க அமைச்சின் இணைச் செயலாளரும் கல்வி அமைச்சின் தமிழ்மொழி அமுலாக்கல் மதிய போசனப் பகுதிகளுக்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளருமான திரு. வெற்றிவேலு சபாநாயகம், வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சுச் செயலாளர் திரு. ஈ. ஜே. சற்குணராஜா, யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரங்லிகம், வடமராட்சி கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. பீ.வீரபத்திரன் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (52)

# ‘தமிழீழவிடுதலை பெறுவோம் என்பது முடிந்த முடிவாகும்’

## - குணம்

(பருத்தித்துறை)

‘‘தமிழீழ விடுதலைப் போராட்டத்திலே தம்மை முழுமையாக அர்ப்பணித்திருந்த காப்டன் மொறிஸ். லெப்டினன்ற் நம்போ. இளம்புலி சிறீ ஆகியோர் பருத்தித்துறையிலே இந்திய ராணுவத்தினரின் தாக்குதல்கள் தலைவிரித்தாடியமுக்கிய காலகட்டத்திலே ராணுவத்தினரை எதிர்த்துப் போராடி விடுதலைச் சாதனைகளை நிலைநாட்டி விடுதலைப்போராட்டத்தை முன்னெடுத்துச் சென்று முன்னணியில் திகழ்ந்தவர்கள்’’.

வீரமரணமடைந்த காப்டன் மொறிஸ், லெப்டினன்ற் நம்போ, இளம்புலி சிறீ ஆகியோரின் நினைவுதினக் கூட்டத்திலே கலந்து கொண்டு உரையாற்றிய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி வடமராட்சி இணைப்பாளர் திரு. குணம் இவ்வாறு குறிப்பிட்டார்:

பருத்தித்துறை மருதடி வைரவராலய அருகாமையில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு திரு. எம். இரத்தினசோதி தலைமை தாங்கினார்.

வீரமரணமடைந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் பெற்றோர்கள் சம்பிரதாய பூர்வமாக கூட்டத்தை ஆரம்பித்து வைத்தனர். தொடர்ந்துஉரையாற்றிய மக்கள் விடுதலை முன்னணி வடமராட்சிஇணைப்பாளர் திரு. குணம் குறிப்பிட்டதாவது: தமிழ்மக்களின் வரலாறு நீண்டகால புரட்சிகர அத்தியாயத்தைக் கொண்டது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து எத்தனையோ இழப்புகள், அர்ப்பணிப்புகள் தியாகங்களைத் துணிவுடன் மேற்கொண்டமையினாலேயே இன்று தமிழீழ விடுதலைப் போராட்டம் உலகிலேயே அதி உன்னத நிலையில் திகழ்கின்றது

உலகிலே பல நாடுகளில் தேசிய விடுதலைப் போராட்டங்கள் நடைபெறுகின்றன. இதில் பல விடுதலைப்போராட்டங்கள் வெற்றி பெற்றிருக்கின்றன. சிலவிடுதலைபோராட்டங்கள் இவ் விடுதலைப் போராட்டங்களின் வரலாற்றிலே தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டம் வியத்தகு சாதனைகளைப்புரிந்து உலகரீதியாக முன்னணியில் திகழ்ந்து உயர்ந்து நிற்பதை உலகம் பாராட்டுகின்றது. தமிழீழ விடுதலைப் போராட்டம் இவ்வாறு முன்னணியில் திகழ்ந்து உயர்ந்து நிற்பதற்குக் காரணம் தமிழினத்துக்குக் கிடைத்த தீர்க்கதரிசனமும் துணிவும் இலட்சியமும் கொண்ட உன்னத தலைமை தான் என்பதைச் சகலரும் ஏற்றுக்கொள்வர்.

முன்னைய தமிழ்த் தலைவர்களின் பிழையான வழிகாட்டல் போக்குகளாலும் தமிழின விடுதலை தொடர்ந்தும், ஒவ்வொரு தலைமுறைகளுக்குக் கையளிக்கப்பட்டுவந்துள்ளது. ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகளின் விடுதலைப் போராட்டத்தில் வெற்றி பெறுவதே தவிர இப்போராட்டத்தை அடுத்த தலைமுறைக்குக் கையளிக்க தமிழீழ விடுதலைப் புலிகள் தயாரில்லை அடக்கி ஒடுக்கப்பட்ட தேசிய இனமொன்றின் விடுதலைவேட்கையைஎந்த வித சக்தியாலும் தடுத்துவிட முடியாது. தமிழீழ விடுதலைப் புலிகளின் இலட்சிய வேட்கை வெற்றிபெற்று தமிழீழ விடுதலை பெறுவோம் என்பது முடிந்த முடிவாகும்.

தமிழீழவிடுதலைப் புலிகளின் பலத்தை உலக நாடுகள் நன்கறிந்துள்ளன. விடுதலைப் புலிகளின் பலத்தை நன்குவிளங்கிய படியினாலேயே இந்தியா தமிழீழத்தை விட்டு ஓடியது, இலங்கை பேச்சுவார்த்தைக்கு அழைத்தது. தமிழீழ விடுதலைப் புலிகளின் பலம் மேலும் வலுப்படுத்தப்படும்போது எமது விடுதலைப் போராட்டத்தில் வெற்றியை வெகு விரைவில் பெற்றுவிடமுடியும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி வடமராட்சிப் பொறுப்பாளர் செல்வி லூசியா, விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியைச்சேர்ந்த திரு. அரசலிங்கம், திரு. எஸ். திருநாவுக்கரசுமுதலி, திருமதி ஈஸ்வரி ஆகியோரும் உரையாற்றினர். செல்வன் திவாகரன் (கண்ணன்) நன்றி கூறினார். (52)

## ‘ஈழநாடு’

### வார மலர்

### 13- 05 - 1990

- வானொலி நாடகங்கம் (தொடர் கட்டுரை)
- கிழக்கும் மேற்கும் (தொடர்கவிதை)
- தாய்மை விழித்தது (சிறுகதை)
- கிழக்கில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம்
- மொரிசியசில் இரு வாரங்கள்
- நல்லூரை அழிய விடலாமா?
- கைத்தொழில் உலகில்
- விலங்கு விசர்
- மாணவர் மன்றம்
- மங்கையர் மஞ்சரி
- ஞாயிறு மஞ்சரி

மற்றும்

வழக்கமான அம்சங்கள்

பக்கங்கள் - 12

விலை ரூபா 3/-

# ‘‘நாளை மலரும் தமிழீழத்தை நிச்சயம் வென்றெடுப்போம்’’

## - இராகுலன்

(தென்மராட்சி)

தமிழீத்திற்காக தமது இன்னுயிர் நீத்த ஆயிரக்கணக்கான வீரத்தியாகிகளின் தியாகத்தை உணர்ந்து நாளை மலரவுள்ள தமிழீழத்தை நிச்சயம் வென்றெடுக்க நாமனைவரும்தோளோடு தோள் சேர்ந்து ஒருமனத்துடன் பாடுபடவேண்டும்.’’

கொடிகாமத்தில் பொதுமக்களுடன் கருத்துப் பரிமாறல் நிகழ்ச்சி ஒன்றில் பேசும்போது தென்மராட்சி கிழக்கு தமிழீழ வட்டச் செயலகத்தலைவர் திரு இராகுலன் இவ்வாறு கூறினார்.

திரு. க. வெற்றிவேலு தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் திரு. இராகுலன் மேலும் கூறியதாவது;

தற்போதுஎமது போராட்ட வடிவம் சிறுமாற்றமடைந்து ஊர்வலங்கள் கூட்டங்கள் மூலம் உலகநாடுகளுக்குஎடுத்துக்காட்டப்பட்டு வருகிறது. இதை நன்குணர்ந்து இதுவரை நாம் இழந்துள்ள எண்ணற்ற தியாகிகளின் தியாகத்தை உணர்ந்து ஒருதலைப்பட்சமாக நின்று நாளை மலரும் தமிழீழத்தை நிச்சயம் வென்றெடுப்போம் என்ற உறுதியான மனப்பாங்குடன் ஒன்றுபடவேண்டும்,

தலைவர் திரு. வெற்றிவேலு தமதுரையில்: எமது மாபெரும் தலைவனின் இலட்சியத்தில் நின்று தமிழீழத்தை வென்றெடுப்போம் என்ற பிரதிக்ஞை நம் ஒவ்வொருவரின் சிந்தையிலும் உருவாக வேண்டும். எண்ணியார் திண்ணயராகப் பெற்றால் எண்ணிய அனைத்தும் பெறலாம். இந்தத் தத்துவத்தில் நின்றே தமிழீழ விடுதலைப்புலிகள் இளைஞர் ஒரே மனத்துடன் தியாக உணர்வுடன் போராடிக்கொண்டு நிற்கின்றனர். தாம் எண்ணிய இலட்சியம் பெறும் பொருட்டே அவர்கள் செயற்படுகின்றனர். நாட்டில் சமாதானம் அன்பு ஐக்கியம், புரிந்துணர்வு என்பன உண்டாகவே அவர்களின் செயற்பாடுகள் களங்கமின்றி நடத்தி வரப்படுகிறது. நாம் அவர்களுக்கு நம் நேசக் கரங்களை நீட்டி பூரண ஒத்துழைப்பு வழங்குவோமாக’’ என்றார்

## நிதி உதவி

(உடுவில்)

வலிகாமம் தெற்குப் பிரதேசசபையின் உடுவில் உப அலுவலகத்திற்கு உட்பட்ட சனசமூக நிலையங்களுக்கான 1989ம் ஆண்டுக்குரிய நிதி கிடைத்துள்ளதாக உப அலுவலகப் பொறுப்பதிகாரி திரு இ. கணேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

‘ஏ’ பிரிவு சனசமூகநிலையங்களுக்கு தலா 600 ரூபாவும், ‘பி’ பிரிவு சனசமூகநிலையங்களுக்கு தலா 300 ரூபாவும் வழங்கப்பட உள்ளன.

இப்பிரிவுச் சனசமூகநிலையங்களுக்கு இதுபற்றி அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் விரைவில் சனசமூகநிலையப் பொறுப்பாளர்கள் இந்நிதியைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் திரு. கணேஸ்வரன் தெரிவித்துள்ளார். (109)

# ‘‘நாட்டுமக்களின் பிணக்குகள் பேச்சுவார்த்தைமூலம் தீர்வுகாண முடியும்’’

## - லயன்ஸ் மாவட்ட ஆளுநர்

(மட்டுவில்)

‘மத மொழி பாகுபாடின்றி சகோதரத்துவத்துடன், ஒரு தாய் பிள்ளைகளாக வாழ்ந்து வந்த இந்த நாட்டு மக்கள் மத்தியில் எதிர்பாராத நாட்டு சம்பவம் காரணமாக சிலபிணக்குகள் உண்டு. இது சுமுகமான பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு காணமுடியும். நாம் இலங்கை மாதா பிள்ளைகளாக, சகோதரர்களாக என்றும் ஒன்றுபட்டு வாழுவோம்’

இவ்வாறு லயன்ஸ்கழக மாவட்ட ஆளுநர் திரு. பிரேமச்சந்திரா பத்திரானா, சாவகச்சேரி லயன்ஸ் கழகத்திற்கு தனது உத்தியோக பூர்வமான விஜயத்தை மேற்கொண்டபொழுது அவருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பின் பொழுது கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது, எமது லயன்ஸ் கழகமும் சகோதரத்துவம், புரிந்துணர்வு, சேவை மனப்பான்மை ஆகிய பண்புகளின் அடிப்படையில் அகில உலக ரீதியாக சேவை செய்து வருகிறது. இந்த நாட்டிலுள்ள நாமும் இனிமேலாவது ஒரு தாய் பிள்ளைகளாக ஒன்றுபட்டு வாழவேண்டும், என்றார்.

சாவகச்சேரி லயன்ஸ் கழக தலைவர் திரு. பி. தியாகராஜா இதர உறுப்பினர்கள் கவனரை வரவேற்றனர்.

முதன் முறையாக இங்கு வருகை தந்த ஆளுநர் பிரேமச்சந்திரா பத்திரானவுடன் அவர் பாரியார், உதவி மாவட்டத் தலைவர் திரு. கே.பத்மநாதன், வலயத்தலைவர் டாக்டர் எமில் அத்தனாசியர் ஆகியோரும் கூடவந்திருந்தனர். இவர்களை சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் வரவேற்று மதிய போசன விருந்தளித்து கௌரவித்தனர்.

சாவகச்சேரி லயன்ஸ் தலைவர் திரு. வி. பி. தியாகராஜா சாவகச்சேரி லயன்ஸ்

(8-ம் பக்கம் பார்க்க)

# சிரித்திரன் சுந்தர் நகைச்சுவையூடாக தமிழரின் வாழ்வை எடுத்துக்காட்டினார்

## பேராசிரியர் சிவத்தம்பி

[யாழ்ப்பாணம்]

''சிரித்திரன் சுந்தர் நகைச்சுவை உணர்வுக்கு ஊடாக ஈழத்தமிழரின் சிறப்பாக யாழ்ப்பாண மக்கள் வாழ்க்கையின் பூரணத்துவத்தை எடுத்துக் காட்டினார்''

இவ்வாறு நேற்று மாலை நல்லைஆதீனத்தில்நடைபெற்ற 'சிரித்திரன் சித்திரக்கொத்து' நூல்வெளியீட்டு விழாவில் பேராசிரியர் கா. சிவத்தம்பி கருத்துரை வழங்குகையில் தெரிவித்தார்.

இந்நூல் வெளியீட்டு விழாவுக்கு திரு.பொன் பூலோகசிங்கம் தலைமைவகித்தார்.

பேராசிரியர் கா. சிவத்தம்பி தொடர்ந்து உரையாற்றுகையில்:

''எம்மிடையே வாழுகின்ற கலைப்பூர்வமான சக்திமிக்க கலைஞரை கௌரவிக்க இங்கே கூடியுள்ளோம். 'இலங்கையில் மிகவும் முக்கியமான கார்ட்டூன் கலைஞர், அற்புதமான ஓவியர். இலங்கை பத்திரிகைத் துறையில் இவர் ஆற்றிய கார்ட்டூன் முக்கிய இடம் வகிக்கின்றது. ஈழத்துச் சஞ்சிகைத் துறையில் சிரித்திரனுக்கு முக்கிய இடம் உண்டு.

ஈழத்தமிழரின் சிறப்பாக யாழ்ப்பாணத் தமிழரின் சிரிப்பு உணர்வை நகைச்சுவையுணர்வை எடுத்துக்காட்டும் சின்னம் சிரித்திரன்ஆகும். எங்களை நாங்களே பார்த்து சிரித்துக்கொள்ளக்கூடிய தன்மை இருந்தது. இது சுயவிமர்சன போக்குத் தன்மையை வளர்த்தது. நகைச்சுவையுணர்வுடன் ஜனநாயக பண்பையும் சிரித்திரன் எடுத்துக்காட்டியது. இந்த அம்சங்களில் சிரித்திரன் பங்களிப்பு ஏராளமானதாகும்.

சிரித்திரன் சுந்தரிடம் அசாதாரண நிகழ்ச்சிகளைக்காணும் திறனும், நகைச்சுவை உணர்வும் அடங்கிய இரண்டு சிறப்பு குணம்சங்கள் காணப்படுகின்றது.

காழ்ப்புணர்வு நெஞ்சி இல்லாமல் நகைச்சுவையுணர்வுடன் கருத்தோவியங்களை படைத்தார். வாழ்க்கையின் சகல மட்டங்களையும் சரிவர உணர்ந்தவராக விளங்கினார்

கரவெட்டி, நெல்லியடிப் பகுதிகளின் அம்சம்களை சவாரித்தம்பர் சகபாடி சின்னக்குட்டி ஆகியோரின் வழியாக எடுத்துக் காட்டினார். கரவெட்டி மண்ணில் பற்று இருந்தபடியினால் தான் இதனை வரைந்தார்.

சுந்தரின்படைப்பு கள்நீண்ட காலம் வாழவேண்டுமென்று வாழ்த்துகிறேன்'' என்றார். [152]

## அடித்துக்காயப்பட்டவர் ஆஸ்பத்திரியில் மரணம்

[யாழ்ப்பாணம்]

நேற்று முன் தினம் இரவு இனந்தெரியாத சில நபர்களால் அடித்துத் தாக்கப்பட்ட ஒருவர் ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு தீவிர சிகிச்சைக்குட்படுத்திய சமயம் மரணமானார்.

புன்னாலைக்கட்டுவனில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த செல்லர் ஞானச்செல்வம் [வயது 27] என்பவரே மரணமானவராவார். [56]

## தருமபுரத்தில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் தலைமையகம்

[ஒட்டுசுட்டான்]

தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைமைச் செயலகம் தருமபுரத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

செயலகம் 50 ஏக்கருக்கு மேற்பட்ட தென்னம்தோட்டத்தில் அமைந்துள்ளது.

இங்கு கூடாரங்களும் கொட்டில்களும் அமைக்கப்பட்டுள்ளன.

செயலகத்தைச்சுற்றி பாரிய உயர அளவில் மண்ணினால் அரண் அமைக்கப்பட்டு வருகிறது. [144]

## நயினாதீவு இறங்குதுறை மேடை 'மினி' சூறுவளியால் பாதிப்பு

(வேலணை)

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்திற்கு முன்னால் உள்ள இறங்குதுறைமுக மேடை அண்மையில் வீசிய சூறுவளிக் காற்றினாலும், பொங்கி எழுந்த கடல் அலைகளினாலும் பலத்த சேதத்துக்குள்ளானது.

ஏற்கனவே சேதத்துக்குளாகி கிடந்த இறங்குதுறை முகமேடை இந்த மினிச்சூறுவளி காற்றினால் பழுதாகியதுடன் அதில்கிடந்த கூழாங்கற்கள் யாவும் வீதியெங்கும் சிதறிவிட்டன.

இதனால் பிரயாணிகள் வீதியால் செல்ல முடியாத நிலையில் உள்ளனர் கூழாங்கற்கள் துறைமுக கரைமேடைக்கருகில் கிடப்பதால் மோட்டார் வள்ளங்களை மேடைக்கருகில் கொண்டுவர முடியாது இருப்பதாகவும் மோட்டார் வள்ளக்காரர்கள் தெரிவித்தனர்.

## சந்திர

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் யாழ். மாவட்ட சுகாதார பணிப்பாளர் தெரிவித்தார். [153]

## புயலால்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

உத்தரவு பிறப்பித்துள்ளதாகவும் முதல்வர் மேலும் தெரிவித்துள்ளார். [அ]

## வைத்தியசாலைக்கு குழாய்நீர்வசதி

(புலோலி)

மாங்குளம் அரசினர் வைத்தியசாலைக்கு விரைவில் குழாய் நீர் கிடைக்கவுள்ளது.

இவ்வைத்தியசாலைககு குழாய்நீர் வசதி ஏற்படுத்துவதற்கு கடந்த 5வருடங்களுக்கு முன்னர் ஆயிரம் கலன்கொள்ளக்கூடிய தண்ணீர்த்தாங்கி ஒன்று கட்டப்பட்டிருந்தது.

அத்தண்ணீர்த்தாங்கிக்கு குழாய்கள் இணைப்பு வழங்கத் தாமதமானதால் இவ்வைத்தியசாலைக்கு குழாய்நீர் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டது.

தற்போது இவ்வைத்தியசாலை தண்ணீர்த்தாங்கியிலிருந்து நீர் வழங்குவதற்காக குழாய்கள் பொருத்தப்பட்டு வருகின்றன. குழாய்கள் பொருத்தப்பட்டதும் இவ்வைத்தியசாலைக்கு குழாய் மூலம் தண்ணீர் வழங்கப்படும். (61)

## நாட்டுமக்கள்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

கழகத்தின் கடந்தகால சேவைகளை விளக்கினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: எமது பகுதியில் உள்ள வறிய குடும்பங்களை சேர்ந்த பார்வை குறைந்தவர்களுக்கு நாம் மூக்குக் கண்ணாடிகளை இலவசமாக வழங்கியுள்ளோம் மேலும் வீதி ஒழுங்கு குறியீடுகளைச் செய்து உதவியுள்ளோம். நெருக்கடியான காலகட்டங்களில்இங்கு வந்த அகதிகள் பராமரிப்பில் இலவச மருந்து சிகிச்சைகளை வழங்கியுள்ளோம். நீரழிவு நோய் பற்றிய கருத்தரங்குகளை நடத்தியிருக்கிறோம், இன்னும் பல வகையான தொண்டுகளைச் செய்துள்ளோம்.

லயன்ஸ் கழகம் நடத்திய இலவச தையல் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்ற பெண்களுக்கு திருமதி பத்திரானா சான்றிதழ்களை வழங்கினார். (82)

## ஆலய உற்சவம் இன்று ஆரம்பம்

[புங்குடுதீவு]

புங்குடுதீவு புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலய வருடாந்த உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்று வைபவத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும்.

உற்சவ காலங்களின்போது விசேட மறை உரைகளும் நிகழ்த்தப்படும்.

பத்தொன்பதாம் திகதி நற்கருணை நாதரின் எழுத்தேற்றமும், 20ம் திகதி காலை திருநாள் திருப்பலிப்பூசையும் புனிதரின் திருக்கூட்டுப் பவனியும் இடம்பெறும். [101]

## மந்திகையில் கொள்ளை!

(புலோலி)

மந்திகையிலுள்ள மருந்துக்கடை ஒன்றின் பூட்டுகள் உடைக்கப்பட்டு 30 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

இரவுநேரத்தில் நடைபெற்ற இக்கொள்ளையின்போது பாலுணவுகள், மருந்து வகைகள் என்பன கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. இக்கொள்ளை சம்பந்தமாக தமிழீழவிடுதலைப் புலிகளிடம் புகார் செய்யப்பட்டுள்ளது. (61)

## புதுடில்லியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துகொண்டனர்.

இந்தியாவின் பல பகுதிகளிலும் இந்திரா காங்கிரஸ்கட்சியால் ஏற்பாடு செய்யப்பட்ட உண்ணாவிரதப் போராட்டம் நேற்று நடைபெற்றது. (து)

## கிளிநொச்சியில் பாரிய

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தண்ணீர்த் தாங்கி ஒன்றும் கிளிநொச்சியில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

குழாய்நீர் மூலம் தண்ணீர் வழங்கும் திட்டம், முதலில் கிளிநொச்சியில் மாவட்ட வைத்தியசாலையில் நடைமுறைப்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. (83)

## வணசிங்கா அஞ்சலிக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கத்தின் முன்னாள் தலைவர் அமரர் டி. எஸ். கே. வணசிங்காவிற்கு அஞ்சலி செலுத்தும் முகமாக இன்று பி. ப. 2-30 மணியளவில் யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நினைவஞ்சலிகூட்டம் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் கல்விமான்கள், தொழிற்சங்கத்தலைவர்கள் உட்பட பலர் அஞ்சலியுரை நிகழ்த்துவார்கள்.

இந்த நினைவஞ்சலிக் கூட்டத்தையொட்டி இன்று யாழ். மாவட்டத்திலுள்ள சகல பாடசாலைகளும் நண்பகல் 1-00 மணியுடன் மூடப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது. (து)

## லொறி விபத்தில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரிவீதியை சேர்ந்த மகேந்திரராசா அறிவழகன் என்பவரே இவ்வாறு பலியானவராவர்.

இந்தச் சம்பவம் பற்றி கூறப்படுவதாவது: நேற்று முற்பகல் காலையடி இடும்பன் கோவிலடியில் மேற்படி லொறியை நிறுத்திவிட்டு சாரதி தமது வீட்டுற்குச் சென்று விட்டதாகவும் அப்போது லொறியின் கிளீனர் லொறியை ஸ்ராட் செய்து செலுத்த முற்பட்டபோது லொறி வேகமாக ஓடத் தொடங்கியது. அப்போது வீதியால் வந்த சிறுவனை அந்தலொறி மோதியதாகவும் ஸ்தலத்தில் அவர்பலியானதாகவும் கூறப்படுகிறது.

கிளீனர் விடுதலைப் புலிகளிடம் சரணடைந்துள்ளார். [72]

## பனை அபிவிருத்தி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வரை சபை உறுப்பினர் திரு. பூ. செல்லத்துரை பதில் தலைவராக கடமையாற்றவுள்ளார்.

பனை அபிவிருத்திச்சபையின் கூட்டம் கடந்த புதன்கிழமை வீடமைப்புச் செயலகத்தில் உள்ள இச்சபையின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் திரு. நடராசா உட்பட ஐந்துசபை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## ஆந்திரா புயலில் 57 பேர் பலி 10 லட்சம் வீடுகள் சேதம்!

(சென்னை)

ஆந்திரா பிரதேசத்தில் வீசிய பயங்கர புயலுக்கு இதுவரையில் 57 பேர் பலியாகியுள்ளதாகவும், 10 லட்சம் வீடுகள் சேதப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பிந்திக்கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

ஹைதராபாத்துக்கு அண்மையிலுள்ள இரண்டு மாவட்டங்களைக்கோரமாகத்தாக்கிய இப்புயலினால் பலலட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடுகள், மரங்கள் பிடுங்கி எறியப்பட்டதுடன், மின்சார கம்பங்கள் முறிந்து வீழ்ந்துள்ளன.

## சாம் தம்பிமுத்து

(1ம் பக்கத் தொடர்ச்சி)

''மக்கள் துப்பாக்கி வன்முறை என்றவொரு அச்சமில்லாமல் நாட்டில் நிம்மதியாக நடமாடும் நிலைவரவேண்டும். இதற்கு ஏற்றவகையில் அரசு பாடுபடும். யாரும் கொலை செய்துவிட்டு தப்பித்துப்போகமுடியாது'' என்று பாதுகாப்புத்துறை செயலாளர் சிறில் ரணதுங்கா தெரிவித்துள்ளார்.

''மக்கள் அமைதியாக வாழ்க்கை நடத்திக்கொண்டிருக்கும் போது அதனைக்குலைக்கும் நோக்கோடு செயல்படும் ஆயுதக்குழுவினர் நாட்டில் உலவ ஒருபோதும்அனுமதிக்க முடியாது'' என்றும் அவர் மேலும் கூறினார். (து)

## இந்திய

(1ம் பக்கத் தொடர்ச்சி)

செயலக காணி அதிகாரிகள், உத்தியோகஸ்த்தர்கள் மீளவும் புதிதாக உறுதிப்பத்திரம் பெற பல சிரமங்களையும் எதிர்நோக்கியுள்ளதாகவும் தெரிகிறது. (83)

## வீடமைப்பு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. பிரேமதாசா பிரதம மந்திரியாக இருந்தபோது ஆரம்பிக்கப்பட்டது இத்திட்டம்

## அன்ரன் பாலசிங்கம் கலந்து கொண்டார்

(யாழ்ப்பாணம்)

நல்லை ஆதீனத்தில் நேற்று மாலை சுந்தரின் சிரித்திரன் சித்திரக்கொத்து நூல்வெளியீட்டுவிழா நடைபெற்றது.

இந்த நூல்வெளியீட்டுவிழாவில் தமிழீழ விடுதலைப்புலிகள் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், திருமதி அடெல் பாலசிங்கம் ஆகிய இருவரும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். (153)

## மரண அறிவித்தல்

### மகேந்திரராசா அறிவழகன்

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரிவீதியைச் சேர்ந்த மகேந்திரராசா அறிவழகன் நேற்று அகால மரணமானார். இவர் திரு. பொன்னையா மகேந்திரராசா (பரந்தன் ராஜா கூல்பார் உரிமையாளர்) திருமதி ம. கெங்காதேவி ஆகியோரின் அன்புப் புதல்வனாவார். அன்னாரின் பூதவுடல் இன்று அவரது இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக விளாவெளி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்;
செ. அன்பழகன்.

(சி 3844)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990-ம் ஆண்டு வைகாசி மாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.